27th APRIL 2026

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 105 | பக்கங்கள் - 13 | editor.uthayam@gmail.com

## வக்பு சபையின் தலைவராக மர்ஷுட் பாரி நியமனம்

**புது உறுப்பினர்கள் நாளை நியமனம்**




வக்பு சபையின் புதிய தலைவராக பல்வேறு சிவில் அமைப்புக்களில் பணியாற்றிய அனுபவமிக்க மர்ஷுட் பாரி நியமிக்கப் பட்டுள்ளார்.

02ம் பக்கம்பார்க்க...

# ஹஜ்ஜுக்கான ஏற்பாடுகள் பூர்த்தி இலங்கையிலிருந்து 3500 பேர் பயணம்

**மே முதலாம் திகதி முதல் குழு புறப்படும்**

**விமான நிலையத்தில் வழியனுப்பும் நிகழ்வு**



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இவ்வாண்டு (2026) புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக இலங்கையிலிருந்து சவூதி அரேபியாவை நோக்கி முதலாவது ஹஜ் குழு மே மாதம் 01 ஆம் திகதி இரவு 09.05 மணிக்கு சவூதி ஏயார் லைன்ஸ் விமானம் மூலம் பயணமாகவுள்ளனர்.

இந்த முதலாவது ஹஜ் குழுவில் 07 ஹஜ் முகவர்கள் மூலமாக 325 பேர் பயணமாகவுள்ளனர்.

இவர்களை வழியனுப்பும் நிகழ்வு 01 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 05 மணிக்கு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் சவூதி அரேபியாவின் தூதுவர் காலித்

02ம் பக்கம்பார்க்க...

## அர்ச்சுனா எம்.பீ.க்கு 29 வரை விளக்கமறியல்



தமது தனிப்பட்ட பாதுகாப்பு துப்பாக்கியை காட்டி பெண் ஒருவரை அச்சுறுத்திய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவரை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு

02ம் பக்கம்பார்க்க...

## வெசாக் வாரத்தில் உழ்ஹிய்யாவுக்கு தடையில்லை; விமர்சனங்களுக்கு பிரதியமைச்சர் முனீர் பதிலடி



ஹஜ் பெருநாளை முன்னிட்டு மேற்கொள்ளப்படும் உழ்ஹிய்யா (குர்பான்) கடமையை இந்த வருடமும் நிறைவேற்றுவதில் எந்தத் தடையும் கிடையாது என சமய விவகார பிரதி அமைச்சர் முனீர் முழப்பர் தெரிவித்தார்.

மே மாதம் 27ஆம் திகதி முதல் ஜூன் மாதம் இரண்டாம் திகதி வரை வெசாக் வாரம் கொண்டாடப்படவுள்ள நிலையில், ஹஜ்ஜு

02ம் பக்கம்பார்க்க...

## நாளை கொழும்பை வந்தடையும் சமாதானத்துக்கான நடை பயணம்

**ஜனாதிபதி தலைமையில் இறுதி நிகழ்வு**

**கொழும்பில் விஷேட பாதுகாப்பு ஏற்பாடு**



நாளை (28) நடைபெறவுள்ள சமாதானத்திற்கான நடைபயணம்“ இறுதி நிகழ்வை முன்னிட்டு, கொழும்பு நகரின்

02ம் பக்கம்பார்க்க...

## போதைப் பொருள் கடத்திய பிக்குகளை வழிநடாத்திய அமிதானந்த தேரர் கைது

**மே 2 வரை தடுத்து வைத்து விசாரிக்க உத்தரவு**

கட்டுநாயக்க விமான நிலையத்தில் போதைப்பொருள் தொகையுடன் கைது செய்யப்பட்ட 22

02ம் பக்கம்பார்க்க...

## பிற சமூக உணர்வுகளை மதித்து உழ்ஹிய்யா கடமையை நிறைவேற்றுங்கள்

**உழ்ஹிய்யா வழிகாட்டல் குழு வேண்டுகோள்**

அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் முழு வாரத்திற்கும் இறைச்சிக்கடைகளை

02ம் பக்கம்பார்க்க...

## அமெரிக்காவுக்கு ஆதரவளிக்க வேண்டாம்

**அண்டை நாடுகளுக்கு ஈரான் எச்சரிக்கை**

அமெரிக்காவுடன் நடைபெற உள்ள இரண்டாவது கட்ட சமாதான பேச்சுவார்த்தைகள் குறித்து நிலவும் நிச்சயமற்ற நிலையினைத்

02ம் பக்கம்பார்க்க...

## நாட்டைக் கட்டியெழுப்பும் பாதையில் பயணிக்க எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்

**ஐ.தே.க.ஆதரவாளர்களுக்கு சஜித் அழைப்பு**



சர்வதேச தொழிலாளர் தினமான, நாட்டில் உழைக்கும் மக்களின் தினத்தை கொண்டாடும் இந்த தருணத்தில், நாட்டின்

02ம் பக்கம்பார்க்க...

## றிஷாதின் வழக்கிலிருந்து நீதியரசர் நவாஸ் விலகல்



வில்பத்து சரணாலயத்தை ஒட்டியுள்ள வனப்பகுதிகளை அழித்து மீள்குடியேற்றங்களை முன்னெடுத்தமைக்கு எதிராக

02ம் பக்கம்பார்க்க...




அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## றிஷாதின்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து, முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை விசாரணை செய்வதிலிருந்து உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவர் இன்று திங்கட்கிழமை (27) விலகியுள்ளார்.

நீதியரசர்களான ஏ.எச்.எம்.டி. நவாஸ், சம்பத் அபேகோன் மற்றும் கிஹான் குலதுங்க ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மேன்முறையீடு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, தனிப்பட்ட காரணங்களுக்காக இந்த மனு விசாரணையிலிருந்து தான் விலகுவதாக நீதியரசர் ஏ.எச்.எம்.டி. நவாஸ் அறிவித்தார்.

இதற்கமைய, குறித்த மேன்முறையீட்டு மனுவை எதிர்வரும் செப்டம்பர் மாதம் 09ஆம் திகதி வேறொரு நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்குமாறு உத்தரவிடப்பட்டது.

வில்பத்து காடுகளை அழித்து மக்களைக் குடியேற்றியமைக்கு எதிராக 2015ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் நீதிக்கான மையத்தினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், காடுகளை மீள வளர்ப்பதற்கான செலவை முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் பொறுப்பேற்க வேண்டும் என தீர்ப்பளித்தது. இதன்படி, அவர் சுமார் 106 கோடி ரூபாயைச் செலுத்த வேண்டும் என வனப்பாதுகாப்புத் திணைக்களம் மதிப்பிட்டிருந்தது.

இந்தத் தீர்ப்பை ரத்து செய்யக் கோரியே ரிஷாட் பதியுதீன் உயர் நீதிமன்றத்தில் இந்த மேன்முறையீட்டைத் தாக்கல் செய்துள்ளார். ஏற்கனவே நீதியரசர்களான மஹிந்த சமயவர்தன, யசந்த கோதாகொட, ஜனக் டி சில்வா மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோரும் இந்த மனு விசாரணையிலிருந்து விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டைக்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து, நாட்டின் அனைத்து மக்களுக்கும் சௌபாக்கியத்தை ஏற்படுத்தும் திட்டமொன்றுக்கு முக்கிய அடியை எடுத்து வைப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி எதிர்பார்க்கின்றது.

இப்போது நடைமுறையில் காணப்படும் காலாவதியான அரசியல் கலாச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து, தற்போது நடக்கும் அரசியல் சூதாட்டத்திலிருந்து விலகி, கொள்கை அடிப்படையில் நாட்டை கட்டியெழுப்பும் நடுத்தரப் பாதையில், சமூக ஜனநாயகம் மற்றும் சமூக சந்தைப் பொருளாதாரத்தின் வழியாக முன்னோக்கிப் பயணிக்க நாம் தயார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மே தினம் தொடர்பாக இன்று (27) விசேட கூற்றை முன்வைத்து கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

எனவே, இந்தப் பயணத்தில் கைகோர்க்குமாறு ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஐக்கிய தேசியக் கட்சியின் சகல ஆதரவாளர்களுக்கும், நாட்டின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் முற்போக்கான சகல மக்களுக்கும் மிகுந்த மரியாதையுடன் அழைப்பு விடுக்கிறேன். ஐக்கிய மக்கள் சக்தியோடு கைகோர்த்துக் கொள்வதற்கு எதிர்வரும் மே 1 ஆம் திகதி கொழும்பு மாளிகாவத்தை பி.டி. சிரிசேன விளையாட்டு மைதானத்திற்கு இலட்சக்கணக்கில் வந்து ஒன்றாய் இணையுமாறு அழைப்பு விடுக்கிறேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

## அமெரிக்காவுக்கு...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

தொடர்ந்து, வளைகுடா அண்டை நாடுகள் வாஷிங்டனுக்கு ஆதரவளிக்க வேண்டாம் என ஈரான் எச்சரித்துள்ளது.

ஈரானின் துணைத் தலைவர் எஸ்மாயில் சாகாப் எஸ்ஃ பஹானி, ஹோர்முஸ் நீரிணையில் தொடரும் தடையை முன்னிட்டு, ஈரானின் அடிப்படை வசதிகள், குறிப்பாக எண்ணெய் கிணறுகள் குறிவைக்கப்பட்டால், அதற்கு நான்கு மடங்கு பதிலடி வழங்கப்படும் என தெரிவித்துள்ளார்.

## போதைப்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

பிக்குகளை வழிநடத்திய பிரதான சந்தேகநபரான பிக்குவை, எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதி வரை 7 நாட்கள் தடுத்து வைத்து விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

சந்தேக நபர் இன்று (27) நீர்கொழும்பு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே, நீர்கொழும்பு மேலதிக நீதவான் சுபாணி அபேசேகர இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

கடவத்தை ரம்முத்துகல ஸ்ரீ புண்ய லங்காராம விகாரையைச் சேர்ந்த அகுணுகொலே அமிதானந்த என்ற இந்தச் சந்தேக நபர், தாய்லாந்திலிருந்து கொண்டு வரப்பட்ட போதைப்பொருள் தொகையை கட்டுநாயக்க விமான நிலையத்தில் பொறுப்பேற்பதற்காகக் காத்திருந்துள்ளார் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.

போதைப்பொருளுடன் 22 பிக்குகளும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டதை அடுத்து, அங்கிருந்து தப்பிச் சென்ற இந்த பிரதான சந்தேக நபர் மிரிஸ்வத்தை பகுதியில் ஒளிந்திருந்துள்ளார்.

அங்கு வைத்து நேற்று (26) பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டார்.

அமிதானந்த என்ற இந்த பிக்குவின் மருத்துவ அறிக்கையின்படி, அவர் கைது செய்யப்படும் வேளையில் போதைப்பொருள் உட்கொண்டிருந்தமையும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், ஏனைய பிக்குகளைத் தாய்லாந்திற்கு அனுப்பியமை மற்றும் அவர்களை வழிநடத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்ட “றுாயவளயீ“ கணக்கை இயக்கியமை போன்றவற்றை இவரே முன்னின்று செய்துள்ளமை நீதிமன்றில் அம்பலமானது.

சுமார் 112 கிலோகிராம் எடையுள்ள ”குஷ்” (முரளா) மற்றும் “ஹேஷ்” (Hash) வகை போதைப்பொருட்களை மிகவும் சூட்சுமமான முறையில் பயணப் பொதிகளில் மறைத்து வைத்து இவர்கள் நாட்டுக்குக் கொண்டு வந்துள்ளனர்.

இதன் பெறுமதி 110 கோடி ரூபாய்க்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## பிற...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

மூடுவதற்கான எந்தவொரு வழிகாட்டலும் வழங்கப்படவில்லை என்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

பொதுவாகவே போயா தினங்களில் மாத்திரமே வியாபார நோக்கிலான அறுப்பு நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப் படுவதை நாம் அறிவோம்.

மேலும், முந்தைய சில சந்தர்ப்பங்களில், வெசாக் வாரம் முழுவதும் இறைச்சிக் கடைகளை மூடுவதற்கான ஏற்பாடுகள் அமைச்சரவை ஆவணங்களில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. தற்போதைய சூழலில் அத்தகைய ஏற்பாடு எதுவும் காணப்படவில்லை.

குறிப்பாக பொசன் மற்றும் வெசாக் காலங்கள் நடைபெற்ற ஹஜ் உல்ஹியாக்களில், பரஸ்பர புரிந்துணர்வுடனும் அரச நிறுவனங்களின் ஒத்துழைப்புடனும் அனைத்து சமுதாயங்களும் தங்கள் மத வழிபாடுகளை சுய மரியாதையுடனம் இடையூறு இன்றியும் நிறைவேற்றிய அனுபவம் எமக்கு உள்ளது.

இந்த சுமுகமான அனுபவத்துடன், உல்ஹிய்யா ஏற்பாடுகள் அனைத்து சமூகங்களின் உணர்வுகளையும் மதிக்கும் வகையில், சட்ட வரம்புக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும் என மரியாதையுடன் வலியுறுத்துகிறோம்.

அனைத்து மதங்களையும் மதிக்கும் வகையில் உள்ளூராட்சி அமைப்புகளும் காவல்துறையும் தொடர்ந்தும் ஒத்துழைப்பை வழங்கும் என நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

இறுதியாக, அனைத்து சமூகங்களினரும் பொறுப்புடனும் கட்டுப்பாட்டுடனும் நடப்பதுடன், குறிப்பாக சமூக ஊடகங்களில் தவறான தகவல்கள் பரப்புவதையும் தேவையற்ற பதற்றங்களை உருவாக்குவதையும் தவிர்க்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

- உழ்ஹிய்யா வழிகாட்டல் குழு 2026

## நாளை...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

பல பகுதிகளில் விசேட போக்குவரத்துத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என பொலிஸ் போக்குவரத்து பிரிவு அறிவித்துள்ளது.

ஜனாதிபதியின் தலைமையில் இந்த நிகழ்வு, நாளை மாலை 4 மணிக்கு கொழும்பு 07 இல் உள்ள சுதந்திர சதுக்கத்தில் நடைபெறவுள்ள விசேட நிகழ்வுடன் நிறைவடையவுள்ளது.

நிலைமையைக் கருத்திற் கொண்டு நாளை காலை 11 மணி முதல் பிரதான வீதிகளில் வாகனப் போக்குவரத்து மட்டுப்படுத்தப்படலாம் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

அதன்படி, பண்டாரநாயக்க சுற்றுவட்டம் முதல் பொரளை சந்தி வரை, பேஸ்லைன் வீதி, மருதானை வீதி, வோர்ட் பிளேஸ், சொய்சா சுற்றுவட்டம் மற்றும் லிப்டன் சுற்றுவட்டம்,

தர்மபால மாவத்தை, சி.டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர மாவத்தை, ஹோர்டன் சுற்றுவட்டம், சுதந்திர மாவத்தை, கேம்பிரிட்ஜ் பிளேஸ், மார்கஸ் பெர்னாண்டோ மாவத்தை மற்றும் நூலக சந்தி,பித்தல சந்தி, ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, முத்தையா வீதி, ஸ்டேபில் வீதி மற்றும் கங்காராம விகாரையைச் சுற்றியுள்ள வீதிகள் மூடப்படலாம்.

குறித்த காலப்பகுதியில் ஏற்படக்கூடிய போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக, இயன்றவரை மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு வாகன சாரதிகள் மற்றும் பொதுமக்களை பொலிஸார் கோரியுள்ளனர்.

## வெசாக்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

டன் தொடர்புடைய முக்கிய விடயமான உழ்ஹிய்யாக் கடமையை நிறைவேற்றுவதில் தடங்கல் ஏற்படும் என சந்தேகங்களும் விமர்சனங்களும் முன்வைக்கப்படும் நிலையில், இது விடயமாக கருத்து வெளியிட்ட பிரதியமைச்சர், பௌத்த மக்களின் முக்கிய தினமான வெசாக் தினம் ஹஜ் பெருநாள் தினத்தில் அனுஷ்டிக்கப்படுகிறது. பௌத்த சமூகத்தின் முக்கிய நாள் என்பதால் பௌத்த சமூகத்தின் மத நம்பிக்கைகளை மதித்து எமது மதச் செயற்பாடுகளை மேற்கொள்வதில் எந்தத் தடையும் கிடையாது. இதற்கு முன்னரும் ஹஜ் பெருநாளும் போயா தினமும் அருகசே கொண்டாடப்பட்டுள்ளது எனக் கூறியுள்ளார்.



# கற்பிட்டி ஆனைவாசலில் மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் பைசல்





**(எம்.எச்.எம்.சியாஜ்)**

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஜே.எம். பைசல் கற்பிட்டி ஆனைவாசல் கிராமத்தில் கடந்த வெள்ளிக் கிழமை (24) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டார்.

மேற்படி நிகழ்வு கற்பிட்டி பிரதேச சபையின் பிரதி தவிசாளர் சமன் குமார ஹேரத் தலைமையில் அனைவாசல் தேசிய மக்கள் சக்தியின் மக்கள் பணிமனையில் இடம்பெற்றது.

மக்களுக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் இடையிலான உறவை வலுப்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த சந்திப்பில், பிரதேச மக்கள் எதிர்நோக்கும் வாழ்வாதார மற்றும் அடிப்படைத் தேவைகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இதில் கற்பிட்டி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எஸ்.எம். றிகாஸ், கற்பிட்டி பிரதேச சபையின் உறுப்பினர் எம்.டி. இப்ஹாம் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் முக்கிய உறுப்பினர்களும், இம் மக்கள் இச்சந்திப்பில் பங்கேற்றனர்.

இதன்போது பொதுமக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை கேட்டறிந்த பாராளுமன்ற உறுப்பினர், அவற்றுக்கான துரித தீர்வுகளைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். அத்தோடு மக்களுக்கான சேவையை முன்னிறுத்தி, தொடர்ச்சியாக இவ்வாறான களப்பணிகள் இப்பிரதேசத்தில் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

## ஆரம்பக்கல்வி ஆசிரியை ஏ.நிஸ்ரியா பிரியாவிடை நிகழ்வில் கௌரவிப்பு





**(எம்.ஏ.முகம்மத்)**

கிண்ணியா அல் அக்ஸா ஆரம்ப பாடசாலையிலிருந்து அப்துல் மஜீது வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள ஏ.நிஸ்ரியா ஆசிரியைக்கான பிரியாவிடை நிகழ்வு (23) அல் அக்ஸா ஆரம்ப பாடசாலையில் இடம்பெற்றது.

4ஆம் தர மாணவர்களின் பெற்றோர்களின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந்நிகழ்வில் ஏ.நிஸ்ரியா ஆசிரியைக்கு வாழ்த்துப்பா, நினைவுச் சின்னம் மற்றும் பரிசில்களை பெற்றோர்கள் வழங்கி கௌரவித்தனர்.

இந்நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## முத்துக்கள் வட்சப் குழும ஏற்பாட்டில் சீனன்கோட்டையில் 1000சீ.சீ.டீ.வீ.கமெராக்கள்



**(பீ.எம். முக்தார்)**

பேருவளை சீனன்கோட்டை முத்துக்கள் வாட்ஸ்அப் குழுமம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இன்று வரை சுமார் மூன்று வருடங்களாக சீனன்கோட்டைப் பகுதியில் பாரிய சமூகப் பணிகளை செய்து வருகிறது.

இந்த வேலைத் திட்டத்தின் ஓர் அங்கமாக சீனன்கோட்டை பகுதியை உள்ளடக்கிய முக்கிய சந்திகளில் சீ.சீ.டீ.வீ கமராக்களை பொறுத்துவதற்கு முன்வந்துள்ளது.

பேருவளை பொலிஸாரின் பங்களிப்போடு மேற்கொள்ளப் படவுள்ள இந்த வேலைத் திட்டத்திற்கு பிரதேச பரோபகாரிகள், மேற்படி வாட்ஸ்அப் குழும அங்கத்தவர்கள், சீனன்கோட்டை பகுதி நலன் விரும்பிகள் சீ.சீ.டீ.வீ கமராக்களை பெற்றுக் கொடுக்க முன் வந்துள்ளனர்.

முக்கிய சந்திகள், சீனன்கோட்டை பத்தை சர்வதேச இரத்தினக் கல் வர்த்தக சந்தை, பாடசாலைகள், பள்ளி வாசல்கள், விளையாட்டரங்குகள், உள்ள பகுதிகள் சுமார் 1000 சீ.சீ.டீ.வீ கமராக்கள் பொறுத்தப்படவுள்ளது.

இது சம்பந்தமாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அல்ஹாஜ் மர்ஜான் பளீலுடன் குழு உறுப்பினர்கள் கலந்துரையாடினர் இந்த வேலைத் திட்டத்திற்கு தனது முழுமையான ஒத்துழைப்பை பெற்றுத் தறுவதாக உறுதியளித் தார்.

## இம்முறை புனித ஹஜ் கடமையை நிறைவேற்றச் செல்லும் துறைமுக ஊழியர்களுக்கு துறைமுக முஸ்லிம் மஜ்லிஸினால் கௌரவம்



**(எம்.எஸ்.எம். ஸாகிர்)**

இம்முறை புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக செல்கின்ற இலங்கை துறைமுக அதிகார சபை ஊழியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு (24) வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகையைத் தொடர்ந்து இலங்கை துறைமுக அதிகார சபையின் பள்ளிவாசலில் முஸ்லிம் மஜ்லிஸ் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இலங்கை துறைமுக அதிகார சபையின் முஸ்லிம் மஜ்லிஸ் தலைவர் இல்ஹாம் மசூர் மௌலானா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், இம்முறை புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற புனித மக்கா பயணமாகும் ஒன்பது துறைமுக ஊழியர்கள் இதன்போது கௌரவிக்கப்பட்டு அவர்களுக்கு ஹஜ் வழிகாட்டி நூலும் வழங்கி வைக்கப்பட்டது.

இலங்கை துறைமுக அதிகார சபையின் முஸ்லிம் மஜ்லிஸ் நிர்வாகம் புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காகச் செல்கின்ற துறைமுக ஊழியர்களை வருடாவருடம் கௌரவித்து வருகின்றனர்.

இவ்வாறு பல நிகழ்வுகள் இந்நிர்வாக சபையினால் நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில், மருதமுனை ஜம்இய்யதுல் உலமாவின் ஓய்வுபெற்ற சிரேஷ்ட விரிவுரையாளரும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் ஊடகப் பிரிவின் ஆலோசகருமான அஷ்ஷெய்க் அன்ஸார் பழீல் மௌலானா (நழீமி), மற்றும் முஸ்லிம் மஜ்லிஸ் நிர்வாக சபை உறுப்பினர்கள் உட்பட துறைமுக அதிகார சபையின் ஊழியர்களும் கலந்து சிறப்பித்தனர்.

## அசறிகம இல்ஹாம் மின்னல் தாக்கியதில் பலி

**(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)**



அசறிக்கமவில் இடி மற்றும் மின்னல் ஷதாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார் அசறிக்கமவை வசிப்பிடமாக கொண்ட 32 வயது இளைஞர் ஒருவரே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் ரீ.இல்ஹாம் என்ற 32 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை ஆவார்.

குறித்த சம்பவம் (22) மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தனியார் துறை பாதுகாப்பு உத்தியோகத்தரான இவர் (22) மாலை கடமைக்கு செல்வதற்கு தயாரான நிலையில் தனது தோலைபேசிக்கு வந்த அழைப் பொன்றில இருந்த போது இடி மின்னல் தாக்கியதில் தரையில் விழுந்துள்ளார்.

உடனடியாக தனியார் வாகனம் ஒன்றில் அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்வப்பட்டார்.

சிகிச்சையளிப்பதற்கு எடுக்கப் பட்ட முயற்சிகள் எதுவும் இதன் போது பயனளிக்கவில்லை. அவர் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

தற்போது அனுராதபுரம் பகுதியில் மாலை நேரங்களில் இடியுடன் பலத்த காற்றும் மழையும் பெய்து வருகிறது. இதனால் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பரசன்கஸ்வெவ பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2026 APRIL 27 - MONDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# மீண்டும் அரங்கேறும் இனவாத அரசியல்

தோல்வி அடைந்த அரசியல்வாதிகளின் இறுதியான புகலிடம் இனவாத அரசியல்" என்ற கருத்தானது, இலங்கையின் அரசியல் வரலாற்றினை புரட்டிப் பார்க்கின்ற போது பல சந்தர்ப்பங்களில் உண்மைப்படுத்தப்பட்டுவந்துள்ளது.

இலங்கை சுதந்திரம் அடைந்தது முதல் இலங்கையின் அரசியல் சகட ஓட்டத்தில் இனவாதம் சார்ந்த சாயலை காண முடிகிறது .

இனவாத கருத்துக்களும் போலியான புனைக்கப்பட்ட பொய்களும் புரலிகளும் அரசியல் அரங்கில் நன்கு சந்தைப்படுத்தப்படுகின.

அனேகமான சந்தர்ப்பங்களில் இவைகளே ஆட்சி மாற்றத்திற்கும் சமூகங்கள் இடையிலே விரிசலை ஏற்படுத்துவதற்கும் பிரதான தூண்டல் காரணிகளாக அமைகின்றன .

எந்த ஒரு பொய்யையும் உடனே உள்வாங்கி, அதனை ஏற்று , அதற்கு பின்னால் கூட்டத்தோடு சேர்ந்து கோவிந்தா போடும் மக்கள் கூட்டம் இருக்கும் வரையில் இத்தகைய இனவாத, துவேஷ உணர்வுகளை தமது ஆயுதமாக பாவிக்கும் அரசியல்வாதிகளின் காட்டில் எப்போதும் அடை மழைதான்.

முன்னாள் அமைச்சர் உதய கம்பன்வில அண்மையில் மிகவும் சர்ச்சைக்குரிய கருத்து ஒன்றை வெளிப்படுத்தியிருந்தார்.

ஈஸ்டர் தாக்குதலை மேற்கொண்ட சஹ்ரான் ஹாஷிமின் பல்வேறு முகாம்களில் நன்கு பயிற்றுவிக்கப்பட்ட பலர் கைது செய்யப்படாமலும் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படாமலும் சுதந்திரமாக திரிந்து வருவதாகவும் சுமார் 300 குண்டு தாரிகள் இவ்வாறு இருப்பதாகவும் கூறியிருந்தார். இத்தகைய பயங்கரவாதிகள் கண்டி பெரஹராவை தாக்கினால் என்ன செய்வது ? என்று கேட்டு , புதியதொரு புரளியை கிளப்பி இருந்தார். வழக்கம் போன்று இவரது இந்த புரளிக்கு சிங்கள ஊடகங்கள் முக்கியத்துவம் அளித்தன.

உதய கம்பன்வில சர்ச்சைக்குரிய கருத்துக்களுக்கு பெயர் போனவர்.

இந்த தடவை இவரது இந்த கூற்றை வழமையான உளறலாக கருதி, கடந்து சென்று விட முடியாது.

ஈஸ்டர் தாக்குதலை போன்று , முஸ்லிம்களை , பகடைக்காயாக பயன்படுத்தும் மற்றுமொரு முயற்சி திரை மறைவில் நடக்கின்றதோ என இவரது கூற்றை வைத்து சிந்திக்க வேண்டியுள்ளது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான கைதுகள் இடம்பெறுகின்ற போதும் அல்லது புதிய விசாரணை அறிக்கைகள் வெளியிடுகின்ற போதும் கம்மன்பில என்ற பூதம் வெளிப்பட்டு மக்களின் கவனத்தை வேறு திசையில் திருப்புவதற்கான முயற்சிகளை செய்து வருவதை அவதானிக்க முடியும்.

ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி சஹ்ரான் ஹாசின்தான் என அண்மையில் வெளியிட்ட தனது புத்தகத்தின் மூலமாக உதயகு கம்பன்வில குறிப்பிட்டு இருந்தார்.

இதுவும் உண்மையான சூத்திரதாரியை கண்டுபிடிக்க விடாமல் மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காக இவர் ஒரு கொந்தராத்தினை செய்வதாகவே இவர் மீது விமர்சனங்கள் இருக்கின்றன.

முன்னாள் ராணுவ புலனாய்வு ப் பிரிவு பணிப்பாளர் சுரேஷ் சாலேயின் கைதின் பின்னர் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் புது வடிவம் பெற்றுள்ளன. இந்த அரசாங்கம் பதவிக்கு வந்ததற்கு பின்னர் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் வெளிப்படை தன்மையும் உண்மை தன்மையும் இருப்பதாக மக்களிடையே நம்பிக்கை தோன்றியுள்ளது. ஈஸ்டர் தாக்குதலுக்கு பின்னால் உள்ள மர்மங்கள் அவிழ்க்கப்பட்டு, உண்மையான சூத்திரதாரி கண்டுபிடிக்கப்படுமோ என்ற பயத்தில் பலர் இருப்பதாக தோன்றுகிறது.

சஹ்ரான் ஹாஷிமும் அவனது சகாக்களும் வெறும் பகடைக்காயாக பயன்படுத்தப்பட்டுள்ளதாகவே இதுவரைக்கும் நடத்தப்பட்டுள்ள விசாரணைகள் மற்றும் ஆய்வுகள் மூலமாக உணர முடிகிறது. இந்த தாக்குதலுக்கு பின்னால் பல சக்திகளும் மறை கரங்களும் இருந்ததாக சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது. இந்த தாக்குதலின் தன்மையும் விதமும் இதனையே உணர்த்தி நிற்கின்றன.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இடம்பெற்ற இந்த ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் அப்போது பதவியில் இருந்த நல்லாட்சி அரசாங்கம் மிகவும் பலவீனப்பட்டிருந்தது. மஹிந்த ராஜபக்ச தலைமையிலான பொதுஜன பெரமுன திடீரென பலமடைந்தது.

இந்த தாக்குதல் அடுத்து வந்த ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபாய ராஜபக்ஷவின் வெற்றியில் பெரும் பங்களிப்பை செய்தது. கோட்டாபய ராஜபக்சவை ஆட்சியில் அமர்த்துவதற்காக செய்யப்பட்ட தாக்குதலாகவே அப்போதும் பரவலாக பேசப்பட்டது .

இதே போன்று , தற்போதுள்ள இந்த ஆட்சியை மாற்றுவதற்காக அல்லது அரசாங்கத்தை பதவி கவிழ்ப்பதற்காக இடம்பெறுகின்ற சதிகளின் ஓர் அங்கமாக உதய கம்மன்பிளவின் இந்த எதிர் கூறல் அமைந்துள்ளதோ என்ற சந்தேகம் தோன்றியுள்ளது.

அதே நேரம், இது போன்ற கருத்தினை வேறொரு பொதுமகன் வெளிப்படையாக சொல்லி இருந்தால் அல்லது சமூக ஊடகங்களில் இது இவை பற்றி தகவல்களை வெளிப்படுத்தியிருந்தால், அவருக்கு எதிராக பயங்கரவாத தடுப்பு பிரிவினர் உடனடியாக செயல்பட்டிருப்பர்.

ஆனால் உதய கம்பன்வில போன்ற இனவாத அரசியலை செய்து வருகின்றார்கள் அது குறித்து ஏன் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் மௌனம் காக்கின்றார்கள் என்பது கேள்விக்குறியாகவே அமைந்துள்ளது.

எனவே நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற அமைதி , சமாதான நிலையை குழப்புவதற்காக வேண்டி திரை மறைவில் இடம் பெறும் சதிகள் குறித்து அரசாங்கம் கூடிய கானும் செலுத்தி அவற்றை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும்.

அதே நேரம் மீண்டும் இனவாத அரசியல் தலைதூக்காமல் இனவாத சக்திக்கு எதிராக அரசாங்கம் கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே சமாதானத்தையும் சுபீட்சத்தையும் விரும்பும் மக்களின் அபிலாசை ஆகும்.




## அர்ச்சுனா...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவிடப்பட்டுள்ளது. பெரியவிளான் பகுதியில் உள்ள காணி ஒன்று தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினருக்கும் , மற்றுமொரு தரப்பினருக்கும் இடையில் தொடர்ந்தும் முரண்பாடு நிலவி வந்துள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை குறித்த காணிக்குள் பாராளுமன்ற உறுப்பினருக்கும் மற்றைய தரப்பினரும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. வாய்த்தர்க்கம் முற்றிய நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் தமது கைத்துப்பாக்கியை காட்டி மிரட்டியமை தொடர்பிலான காணொளிகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகி பெரும் சர்ச்சைக்குள்ளானது.

கைத்துப்பாக்கியை காட்டி மிரட்டிய சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், இன்று வாக்கு மூலம் அளிக்க இராமநாதன் அர்ச்சுனா பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் அவரிடம் வாக்குமூலம் பெற்ற பொலிஸார் சந்தேகநபரை கைது செய்தனர்.

அதேவேளை, குறித்த சம்பவத்தில் தனது காணிக்குள் அத்துமீறி நுழைந்து, தம்மை அச்சுறுத்தியதாக பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா இளவாலை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம், பெண்ணொருவர் நேற்று கைதானார்.

அவரை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் அவரை எதிர்வரும் 29ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## வக்பு...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


புத்தசாசன சமய விவகார கலாச்சார அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவியால் கடந்த 24 வெள்ளியன்று இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 27 வது வக்பு சபைக்கான புதிய உறுப்பினர்கள் நாளை நியமிக்கப்படவுள்ளனர்.

சமய விவகார கலாச்சார பிரதியமைச்சர் முனீர் முலப்பரினால் இந்த நியமனம் வழங்கப்படவுள்ளது.

ரோட்டரி கழகம், முஸ்லிம் மீடியா போரம் உட்பட நாட்டின் சிரேஷ்ட அமைப்புக்களில் மர்ஷுட் பாரி பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.







# ஈஸ்டர் தாக்குதல் ஊழல் மோசடிகள்: அரசுக்கு நெருக்கடி தரும் எதிரணிகள்

**எம்.எஸ். அமீர் ஹுசைன்**

2019 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் இருந்த உண்மையான சூத்திரதாரிகள் யார் என்பதை இதுவரையில் கண்டு பிடித்து வெளிப்படுத்த முடியவில்லை. ஆனாலும் தொடர்ச்சியாக சூத்திரதாரி யார் என்ற கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்ற நிலை யில் அதுபற்றி மீண்டும் குற்றச்சாட்டுக்களும் புதிய தகவல்களும் வெளிப்பட்ட வண்ணம் இருக்கின்றன.

இந்த தாக்குதல் நடத்தப்பட்டு 2026 ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதிக்கு ஏழு வருடங்கள் பூர்த்தியடைகின்றன. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவிக்கு வந்தும் இரண்டு ஏப்ரல்கள் கடந்தும் சூத்திரதாரிகளை வெளிப்படுத்தும் விடயத்தில் மர்மம் நீடிக்கின்றது. இது குறித்து 07 வருட பூர்த்தியை முன்னிட்டு கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு பேராயர் மெல்கம் ரஞ்சித் கருத்து தெரிவிக்கையில் அரசாங்கத்தின் செயற்பாடுகளில் நம்பிக்கை இருக்கின்றது. அதில் அச்சம் கொண்ட ஒருசில சக்திகள் அரசுக்கு எதிராக சதி செய்ய முயற்சி செய்வதாக குற்றம் சாட்டினார்.

ஏழு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தற்கொலை தாக்குதல் சம்பவம் தொடர்பாக இவ்வருடமும் வழமைபோன்று ஆளும் கட்சி, எதிர்க் கட்சி மற்றும் பேராயர் சம்பந்தப்பட்ட பாதிக்கப்பட்ட சமூகம் சார்பாக பல விதமான கருத்துக்கள் முன்வைக்கப் பட்டன. இவ்வாறாக முன்வைக்கப்பட்டு வருகின்ற கருத்துக்கள் தொடர்பாக இத்தகைய கருத்துக்களை முன் வைப்பவர்கள் யார் சார்பாக பேசுகின்றார் கள், யாரை காப்பாற்றும் நோக்கில் பேசுகின்றார்கள், இவ்வாறு கருத்துக்களை வெளியிடுபவர்களின் உள்நோக்கம் தூயதாக இருக்கின்றனவா அல்லது விசாரணைகளை திசை திருப்பி உண்மையான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படாமல் இருப்பதற்காக விலைபோகின்றார்களா? போன்ற சந்தேகங்களையும் ஏற்படுத்தி வருகின்றன.

ஏற்கனவே சந்திரகாந்தன் என்று அழைக்கப்படுகின்ற பிள்ளையான் மற்றும் ஓய்வுபெற்ற முன்னாள் உளவுத்துறை பிரதானி மேஜர் ஜெனரல் துவான் சுரேஷ் சலே உட்பட இன்னும் பலர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன. இதில் ஏற்கனவே தொடுக்கப்பட்ட வழக்கொன்றின் அடிப்படையில் துவான் சுரேஷ் சலே தொடர்பான விசாரணை 2026.04.22 ஆம் திகதி கோட்டை நீதவான் நீதி மன்றத்தில் நடைபெற்றது. இதன் போது பல விடயங்கள் அரசின் மேலதிக சொலிசிடர் ஜெனரல் திலிப பீதிஸ் மூலம் வெளிப்படுத்தப்பட்டமை மேலும் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றது.

அதே நேரம் அரச தரப்பினர் தெரிவிக்கை யில் தற்போதைய விசாரணைகள் மூலம் பல திடுக்கிடும் தகவல்கள் வெளிப்படுத்தப் பட்டுள்ளன. அதனால் 2027 ஆண்டு ஏப்ரில் மாதத்திற்கு முன்னர் உண்மையான சூத்திரதாரிகள் யார் என்பதை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கும் என்று தெரிவித்துள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டு தாக்குதல் நடைபெற்று 07 வருடங்கள் பூர்த்தியடைந்துவிட்டன. இந்த ஏழு வருடங்களாக பாதிக்கப்பட்ட கிரிஸ்தவ மக்கள் தாக்குதலின் உண்மையான சூத்திரதாரி எப்படியும் வெளிப்படுத்தப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தகுந்த தண்டனை வழங்கப்படும் என்று எதிர்பார்த்து தொடர்ச்சியாக காத்திருக்கின்ற நிலையில் ஏமாற்றம் அடைந்து கொண்டிருக் கின்றனர். இப்படியாக 2019 ஆம் ஆண்டு நவம்பரில் பதவிக்கு வந்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ மக்களை ஏமாற்றினார். இந்த தற்கொலை தாக்குதலை ஆயுதமாக பயன்படுத்தியே அவர் ஆட்சியை கைப்பற்றினார்.

சிங்களவாதம், தேசப்பற்று, இஸ்லாமிய பயங்கரவாதம், இஸ்லாமிய அடிப்படை வாதம் ஆகியவற்றை பெரும் பூதங்களாக சிங்கள மக்களுக்கு காட்டி நாட்டில் அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்திய தோடு இனங்களுக்கிடையிலான குரோத உணர்வை வியாபிக்கச் செய்து பதவிக்கு வந்தார். ஆனால் சூத்திரதாரியை கண்டுபிடித்து வெளிப்படுத்துவதை விட்டு அதுவரை நடைபெற்றுக் கொண்டிருந்த விசாரணைகளை திசைமாற்றி குழப்பியடித்து மேலும் நெருக்கடியை ஏற்படுத்தினார்.

அதனால் பேராயர் மெல்கம் ரஞ்சித் உட்பட அவர் சார்ந்த ஒட்டுமொத்த கிரிஸ்தவ சமூகமே அந்த ஆட்சியிலும் ஏமாற்றப்பட்டனர். இந்த விடயம் பற்றி சுனில் ஹந்துன்ஹெட்டி அண்மையில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தற்கொலை தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு நேர விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் முன்னைய அரசாங்கங்கள் உண்மையான சூத்திரதரா ரிகளை கண்டு பிடிக்க தவறிவிட்டனர் மாறாக விசாரணைகளை திசைதிருப்பி தகவல்களையும் புலனாய்வு பதிவுகளையும் குழப்பியடித்து தாக்குதலை திட்டமிட்டவர்களை காப்பாற்றி வந்துள்ளனர் என்ற குற்றச்சாட்டை முன்வைத்தார். அத்துடன் இந்த ஆட்சி இருக்கும் வரையில் அது நடக்காது என்றும் தற்போது நடைபெறும் விசாரணைகளில் புதிய திருப்பங்கள் ஏற்பட்டு வருவதால் உண்மையான குற்றவாளிகளை காப்பாற்ற ஆட்சியை கவிழ்க்க முயற்சிகளை செய்து வருகின்றனர் என்றும் தெரிவித்தார்.

அத்தகைய முயற்சிகளின் ஒரு அம்சமாகவே தரம் குறைந்த இறக்குமதி என்றும் ஊழல் என்றும் அரசு மீது எதிரணியினர் சீறிப்பாய்ந்து வருகின்றனர். இந்நிலையில் அரசாங்கம் ஊழல்களுக்கும் இடமளிக்காது. அத்துடன் மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சர் குமார ஜயகொடி மற்றும் சக்தி வலு அமைச்சின் செயலாளர் உதயாங்க ஹேமபால ஆகியோர் பதவிகளை 2026.04.17 ஆம் திகதி இராஜினாமாச் செய்து ள்ளனர். கடந்த ஜனவரி மாதம் முதல் இறக்குமதி செய்யப்பட்ட 300,000 மெற்றிக் தொன் நிலக்கரி தரம் குறைந்தவை என்றும் இதில் ஊழல்கள் இடம்பெற்றிருப் பதாகவும் பலமான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

ஆனாலும் அரசாங்கம் இத்தகைய குற்றச்சாட்டுக்களை திசை திருப்பும் வகையில் 2009 ஆம் ஆண்டு முதல் இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி தொடர்பாக விசாரணை செய்ய வேண்டும் என்று ஆணைக்குழுவை நியமித்திருக்கின்றது.

அத்துடன் 2009 ஆம் ஆண்டில் இருந்தே இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி தொடர்பாக விசாரணைகளை முன்னெடுப்பதற்காக உயர்மட்ட விசாரணை ஆணைக்குழு ஒன்றும் நியமிக்கப்பட்டிருக்கின்றது. இந் நிலையில் குறைந்தபட்சம் 06 மாதங்களுக்குள் விசாரணைகள் நிறைவடையும் போது உண்மைகள் வெளியா கும். ஆத்துடன் சக்தி வலு அமைச்சர் குமார ஜயகொடி நேர்மை யானவர் என்றும் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்து அரசாங்கத்தை பாதுகாக்க முற்படுகின்றார். இவ்விடயம் அரசாங்கத்திற்கு புதிய நெருக்கடியை ஏற்படுத்தி இருக்கின்றது. எவ்வாறோ 2015 முதல் 2019 வரையில் பதவியில் இருந்த நல்லாட்சி அரசிலும் இலங்கை மத்திய வங்கி பிணை முறி ஏல விற்பனையில் 1300 கோடி ரூபா ஊழல் விவகாரம் அப்போதைய பிரதமராக இருந்த ரனில் விக்கிரமசிங்காவின் ஆட்சிக்கு பெரும் அவப்பெயராக மாறியது.

அப்படியான ஒரு நிலையில் நாட்டில் 78 வருடங்களாக ஊழல் இடம்பெற்ற தாகவும் இனிமேல் ஊழல் இல்லாத ஆட்சியை நிறுவுவோம் என்று பதவிக்கு வந்த இந்த அரசிற்கும் இரண்டு வருடங்கள் நிறைவடைய முன்னரே அதேபோன்ற ஊழல் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு அதற்கு பொறுப்பான அமைச்சரும் செயலாளரும் பதவிகளை இராஜிநாமாச் செய்தமை புதிய நெருக்கடியை ஏற்படுத்தி இருக்கின்றது என்பது வெளிப்படையாக தெரிகின்றது.

இவ்வாறான ஒரு நிலையில் 2024 ஆம் ஆண்டு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கா கிரிஸ்தவ மக்களுக்கும் பேராயருக்கும் புதிய வாக்குறுதிகளை வழங்கினார். அத்துடன் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா 2025 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் 21 ஆம் திகதி இந்த தற்கொலை தாக்குதல் சம்பவத்தின் சூத்திரதாரியை வெளிப்படுத்துவதாக பகிரங்கமாக அறிவித்திருந்தார். அதனால் மக்கள் மத்தியில் புதிய எதிர்பார்ப்புக்கள் வலுவடைந்திருந்தது. உயிர்த்த ஞாயிறு தினமும் கடந்து 2025 ஏப்ரில் 21 ஆம் திகதியும் கடந்த நிலையில் தற்கொலை தாக்குதல் சம்பவத்தின் சூத்திரதாரி யார் என்ற தகவல் ஜனாதிபதியால் வெளிப்படுத்தப் படவில்லை. ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதியை நிறை வேற்றுவார் என்று தொடர்ந்தும் எதிர்பார்த்தவண்ணம் பேராயரும் பாதிக்கப்பட்ட மக்களும் உள்ளனர்.

இந்நிலையில் 2027 ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் உண்மை யான சூத்திரதாரிகளை வெளிப்படுத்த முடியும் என்ற புதிய நம்பிக்கைகளை ஆளும்கட்சி தரப்பினர் வெளியிட்டு வருகின்றனர்.

இவ்வாறாக ஏற்கனவே அரசு வெளியே வரமுடியாத படி பொறிக்குள் விழுந்ததாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகளை வெளிப்படுத்தியே ஆக வேண்டிய நிலையில் இருக்கின்றது. இன்றேல் காலப்போக்கில் நாட்டில் வாழும் கிரிஸ்தவ சமூகத்தின் எதிர்ப்பை சம்பாதிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

இதற்கிடையில் தான் இந்த ஊழல் விவகாரமும் பேசுபொருளாக மாறி இருக்கின்றது. இதற்கிடையில் திறை சேரியின் 75 கோடி ஷரூபா நிதி (25 இலட்சம் அமெரிக்க டாலர்கள்) இணைய மோசடிக்காரர்களால் (ஹெக்கர்ஸ்) மோசடியாக திருடப்பட்டிருக்கின்றது என்ற தகவல் ஒன்றும் வெளியாகியதால் அரச வட்டாரங்களில் பரபரப்பு ஏற்பட்டிருக்கின்றது. ஆனாலும் அரசாங்கம் இவ்விடயம் தொடர்பாக புலனாய்வுகள் நடத்தப்பட்டு வருவதாக தெரிவித்திருக்கின்றது. எவ்வாறானாலும் உண்மையாகவே இந்த விடயம் நடந்திருந்தால் இணைய மோசடிகாரர் களது வேலையா அல்லது இதுவும் அரசின் அதிகாரிகளில் உள் வேலையா என்ற சந்தேகங்களும் எழுகின்றன. விடை கிடைக்கும் வரை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

எப்படியானாலும் இது நாட்டு மக்களின் பணம். அல்லது சர்வதேச நாணய நிதியத்தில் இருந்து பெற்றுக்கொண்ட கடன் பணமாக இருக்கலாம். அல்லது வரிகள் மூலம் திரட்டிய பணம்.

உண்மையில் காணாமல் போய் இருப்பது 75 கோடியா அல்லது அதற்கும் அதிகமானதா என்றும் இன்னும் சரியாக உண்மைகள் வெளிவரவில்லை. நாட்டின் முக்கியமான இருதயம் போன்ற ஒரு இடமே திரைசேரியாகும். ஏற்கனவே நாட்டில் சாதாரண மக்களது ஏராளமான வங்கி கணக்குகளில் இருந்து இந்த சைபர் திருடர்கள் தினமும் பணத்தை கொள்ளையடித்து வருகின்றனர்.

ஆனால் பாதுகாப்புத் துறையினர் அதனை கண்டுபிடிக்க முடியாது என்று தெரிவித்து வருகின்றனர். இதுபோன்றே அண்மையில் தனியார் வங்கி தேசிய அபிவிருத்தி ஒன்றின் வங்கியில் அதில் கடமையாற்றிய அதிகாரிகளே சேர்ந்து 1320 கோடி ஷரூபாவை திருடி இருந்தனர். விசாரணைகள் தொடர்கின்றன.

அரசாங்கம் எந்நேரமும் நாட்டை டிஜிடல் மயப்படுத்த வேண்டும் என்று பறைசாட்டிக் கொண்டிருக்கின்ற நிலையில்

அரச நிறுவனத்திற்குள் சைபர் பாதுகாப்பு எங்கே என்ற கேள்வியை கேட்க வேண்டி ஏற்படுகின்றது. அதனால் அரசாங்கம் இதனோடு இருந்துவிட முடியாது.

பொறப்பற்ற முறையில் திறைசேரிக்குள் செயல்பட்ட அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து மக்களின் வரிப்பணத்தை மீள அறவிட நடவடிக்கை எடுப்பது அவசியமாகின்றது.



# ஒலுவில் பிரதேச மீனவர் கட்டிட புனர்நிர்மாணத்தைப் பார்வையிட உதுமாலெவ்வை எம்.பீ.கள விஜயம்





(கே.எ.ஹமிட்)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 2026 ம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப் பட்ட நிதி ஒதுக்கீட்டில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தேசிய அமைப்பாளர் எம்.எஸ். உதுமாலெப்பைக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் அட்டாளைச்சேனை, ஒலுவில் பிரதேச மீனவர்களுக்கு அவசியமான மின்சார வசதிகளை விரிவுபடுத்துதல், மீனவர் கட்டிடத்தினை புனர்நிர்மாணம் செய்வதற்கான களவிஜயம் (23) திணைக்கள அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில் அட்டாளைச் சேனை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எஸ்.எம்.உவைஸ், பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பபாளர் ஓய்வுபெற்ற அதிபர் எம்.ஏ.அன்சார், பிரதேச சபை உறுப்பினர்களான முன்னாள் தவிசாளர் ஏ.எல்.அமானுல்லா, உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல். பாயிஸ், எம்.எல்.ரினாஸ், நிந்தவூர் பிரதேச மின்சார சபை மின் அத்தியட்சகர், பிரதேச செயலக உத்தியோகத்தர் களும் கலந்துகொண்டனர்.

## சிங்கப்பூரில் ராயல் கிங்ஸ் குழுமம் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் சந்திப்பு






(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

சிங்கப்பூர் ராயல் கிங்ஸ் குழுமத்தின் அலுவலகத்திற்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், பாராளு மன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் வருகை தந்தார்கள்.

அவரை ராயல் கிங்ஸ் குழுமத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் சிராஜுதீன், குழுமத்தின் மூத்த ஆலோசகர் ஜலால் ஆகியோர் வரவேற்றார்கள்.

இந்த சந்திப்பு, இருதரப்பினருக் கிடையிலான நட்புறவை மேலும் வலுப்படுத்துவதோடு, பல்வேறு கருத்துக்களை பரிமாறிக் கொள்ளும் அர்த்த முள்ள வாய்ப்பாக அமைந்தது. அதே நேரத்தில், எதிர்கால வளர்ச்சி வாய்ப்புகள் மற்றும் சர்வதேச ஒத்துழைப்புகள் குறித்து பயனுள்ள கலந்துரை யாடலும் இடம்பெற்றது.

இவ்விழாவை சிறப்பித்த அவரது வருகைக்காக ராயல் கிங்ஸ் குழுமம் தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்ததுடன், எதிர்காலத்தில் மேலும் பல வெற்றிகரமான சந்திப்புகளை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்துள்ளது.

## உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலையின் பாதுகாப்பு மதில் ஆபத்தான நிலையில்



(உக்குவளை நிருபர்)

கடந்த வருடம் ஏற்பட்ட ‘டித்வா’ சூறாவளியின் தாக்கத்தில் ஏற்பட்ட மண் சரிவு அனர்த்தம் காரணமாக உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலையின் பரீட் வகுப்பறை கள் கட்டிடத்தின் பாதுகாப்பு மதில் உடைந்து இக்கட்டிடத்தின் பக்கமாக சாய்ந்து ஆபத்தான நிலையில் காணப்படுகிறது.

கல்வித்திணைக்கள மற்றும் கட்டிட பொறியியலாளர்கள் வருகை தந்து இதுகுறித்து பார்வையிட்டு ஆரம்ப நடவடிக்கை யெடுப்பதாகத் தெரிவித்துக் சென்றும் இதுவரை எதுவித பணிகளும் இடம்பெறாதிருப்பது குறித்து இப்பாடசாலை ஓபிஏ, எஸ்டிஎஸ், மற்றும் பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

# தந்தை செல்வாவின் 49ஆவது நினைவு தினம் அனுஷ்டிப்பு







( ஏ.எச்.ஹஸ்பர்)

தந்தை செல்வாவின் 49ஆவது நினைவு தினம் திருகோணமலையில் (26) அனுஷ்டிக்கப்பட்டது.

இலங்கை தமிழரசு கட்சியின் மாவட்ட கிளை ஏற்பாடு செய்த குறித்த நினைவு தினமானது திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசனின் பங்கேற்புடன் மாவட்ட கட்சி காரியாலயத்தில் இடம் பெற்றது.

தந்தை செல்வாவின் உருவப்படத்துக்கு மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டு உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தினர்.

இதில் திருகோணமலை மாநகர சபை மேயர் க.செல்வராஜா(சுப்ரா), பட்டினமும் சூழலும் பிரதேச சபை தவிசாளர் வெ.சுரேஷ், கட்சியின் மாவட்ட உப தலைவரும் தம்பலகாமம் பிரதேச சபையின் உப தவிசாளருமான வி.விஜயகுமார் உட்பட கட்சியின், கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், முக்கியர்தர்கள் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ச.குகதாசன் ஒரு தேசத்தின் அடையாளத்திற்கான போராட்டத்தின் இதயமாக விளங்கும் ஒரு மனிதரின் 49வது நினைவு நாளை நாம் மிக உணர்வு பூர்வமாக நினைவு கூர்கின்றோம். தமிழினத்தின் உரிமைகளுக்காகத் தன் வாழ்வையே அர்ப்பணித்த, நாம் அனைவரும் அன்போடும் மரியாதை யோடும் போற்றும் “தந்தை செல்வா” எனப்படும் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களுக்கு இன்று நாம் அஞ்சலி செலுத்த கடமைப்பட்டுள்ளோம்.

தந்தை செல்வாவின் “கடமை” என்பது ஒருபோதும் ஒரு கட்சிக்கானது அல்ல் அது ஒரு மக்களின் கண்ணியத்தைப் பாதுகாப்பதாகும். “தமிழ் மக்களை இனி அந்த இறைவன்தான் காப்பாற்ற வேண்டும்” என்ற அவரது புகழ்பெற்ற வாசகம், அவர் எதிர்கொண்ட சவால்களின் தீவிரத்தைப் பிரதி பலிக்கிறது. இருப்பினும், அவர் ஒருபோதும் தனது நிதானத்தை இழக்கவில்லை. ஒரு தலைவரின் பலம் என்பது கத்தும் சத்தத்தில் இல்லை. மாறாக அவர் கடைபிடிக்கும் கொள்கைகளின் உறுதியில்தான் உள்ளது, என்பதை அவர் நமக்குக் கற்பித்தார்.

அவர் மறைந்து 49 ஆண்டுகள் நிறைவடையும் இந்த வேளையில், நாம் ஒரு அரசியல்வாதியை மட்டும் நினைவு கூரவில்லை குரலற்றவர்களின் குரலாகத் திகழ்ந்த ஒரு உன்னத மனிதரை நினைவு கூர்கின்றோம்.

அவரது வாழ்க்கை என்பது வெறும் வரலாறு மட்டுமல்ல் அது நீதி, பொறுமை மற்றும் சமத்துவத்திற்கான ஒரு வழிகாட்டியாகும் எனத் தெரிவித்தார்.

## உலகத் தமிழ் கலை பண்பாட்டு சர்வதேச அமைப்பின் புத்தளம் மாவட்ட ஒருங்கிணைப்பாளராக சுபியானி நியமனம்

(எம்.எச்.எம். சியாஜ்)



உலகம் முழுவதும் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப் பாளர்களை நியமித்து சமூக, கலை, பண்பாட்டு பணிகளை முன்னெடுத்து வரும் உலகத் தமிழ் கலை பண்பாட்டு சர்வதேச அமைப்பு இலங்கை வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்ட ஒருங்கிணைப்பாளராக எம்.எப்.பாத்திமா சுபியானி நியமிக்கப்படுள்ளதாக அமைப்பின் சர்வதேச தலைவர் கலாநிதி எஸ். எம். ரஸ்மி ரூமி தெரிவித்தார்.

இலங்கையின் வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் சிறுவயது முதல் சமூக சேவை, தொழில் முன்னேற்றம், மக்களிடையே யான ஒற்றுமை, வறுமை ஒழிப்பு, வாழ்வாதார மேம்பாடு போன்ற துறைகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகின்றார்.

அத்தோடு மனித உரிமைகள் பாடநெறியின் புத்தளம் மாவட்ட இணைப்பாளராகவும், சமாதான நீதிவானாகவும், மத்தியஸ்த சபை உறுப்பினராகவும் பணியாற்றி வரும் இவர் பல்வேறு சமூக நலத் தொண்டு களை அர்ப்பணிப்புடன் செய்து வருகிறார்.

மேலும், புத்தளம் மாவட்டத்தில் இன நல்லுறவை மேம்படுத்தும் பல்வேறு செயல்பாடுகளை முன்னெடுத்து வருவதோடு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன, மத, மொழி பேதமின்றி உதவி செய்து வரும் சமூக ஆர்வலராகவும் திகழ்வதோடு, சமூக சேவையில் சிறந்து விளங்கியதற்காக 28க்கும் மேற்பட்ட அரசு மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளிடமிருந்து பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சவுதி அரேபிய ஆட்சியாளர்கள் ஆல் சஊத்தின் பொறுப்பின் கீழ்

# புனித மக்கா, மதீனா இருப்பது உலக முஸ்லிம்களுக்கு பெருமை



அஷ்ஷைக்
எம்.எச். ஷேஹுத்தீன்
மதனி (B.A)
பணிப்பாளர்,
அல் ஹிக்மா நிறுவனம்
கொழும்பு




**‘இரு புனிதஸ்தலங்களுக்கு சவுதி அரேபிய ஆட்சியாளர்கள் செய்து வரும் அளப்பரிய சேவைகள் பாராட்டத்தக்கது’**

**‘புனித மக்கா மதீனாவுக்கு அளப்பரிய சேவைகள் செய்வதால் சவுதி அரேபிய மன்னர்களுக்கு ‘ஹாதிமுல் ஹரமைன் அல் ஷரீபைன்’ ‘இரு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலர்’ எனும் கௌரவப் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றனர்’**

**‘புனித ஹஜ்ஜுக்குரிய சகல ஏற்பாடுகளும் சவுதி அரேபிய அரசால் பூரணப்படுத்தப்பட்டுள்ளது’**



‘இலங்கையின் இவ்வருடத்திற்கான ஹஜ் குழு மே மாதம் முதலாம் திகதி கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக சவுதி அரேபியாவுக்கு பயணமாகிறது. இக்குழுவை உத்தியோகபூர்வமாக வழியனுப்பி வைக்கும் விஷேட வைபவம் சமய, கலாசார பிரதியமைச்சர் முனீர் முழப்பர், இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானி, முஸ்லிம் சமய கலாசார திணைக்களப் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலரின் பங்குபற்றுதலோடு இடம்பெற உள்ளது’.

2026 ஆம் ஆண்டில் புனித ஹஜ் கடமையை உலகெங்கிலும் இருந்து புனித மக்காவுக்கு வருகை தரும் ஹாஜிகள் அமைதியான சூழலில் பாதுகாப்புடனும் மன அமைதியோடும், தங்களது ஹஜ் கடமைகளை நிறைவேற்ற உத்தரவாதத்தோடு சகல ஏற்பாடுகளையும் இரு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலரும் சவுதி அரேபிய மன்னருமான சல்மான் பின் அப்துல் அஸீஸ் மற்றும் இளவரசர் முஹம்மத் சல்மான் ஆல் சஊத் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

சவுதி அரேபியாவிலுள்ள புனித மக்கா, மதீனா என்பது உலக முஸ்லிம்களினால் மதிக்கப்படுகின்ற உலக முஸ்லிம்களின் பிரதான வணக்க வழிபாடுகளுடன் சம்பந்தப்பட்ட இரு முக்கிய புனித ஸ்தலங்களாகும். குறிப்பாக முஸ்லிம்களின் ஐம்பெரும் கடமைகளில் ஐந்தாவது கடமையான புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவது புனித மக்கா, மதீனாவோடு சம்பந்தப்பட்ட விடயமாகும். இக்கடமையை தன் உடலாலும் பொருளாளும் சக்தியுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் வாழ்நாளில் ஒரு தடவையாவது நிறைவேற்ற வேண்டும்.

சர்வ வல்லமை படைத்த அல்லாஹ்வை வணங்கி வழிபடவென உலகிலேயே நிர்மாணிக்கப்பட்ட முதலாவது மஸ்ஜித் தான் மக்காவிலுள்ள கஃபதுல்லாஹ்வாகும். இங்கு நிறைவேற்றப்படும் ஒவ்வொரு தொழுகைக்கும் ஒரு இலட்சம் நன்மைகள் கிடைக்கப்பெறும் என்று இஸ்லாத்தின் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

அத்தோடு மதீனாவிலுள்ள மஸ்ஜிதுன் நபவியில் நிறைவேற்றப்படும் ஒவ்வொரு தொழுகைக்கும் ஆயிரம் நன்மைகள் கிடைக்கும்.

இத்தகைய மகத்துவம் மிக்க இந்த இரண்டு ஹரம் ஷரீப்களின் விஸ்தரிப்புகள் என்பது உமர் (ரழி) அவர்கள் ஆட்சி காலம் தொடக்கம் தற்போதைய சவுதி அரசின் ஆட்சி வரை பல கட்டங்களாக இடம்பெற்றது. இருந்தாலும் நவீன சவுதி அரேபியாவை ஆட்சி செய்யத் தொடங்கிய முதலாவது மன்னர் காலத்தில் இருந்து தற்போதைய ஆட்சியாளர் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் வரை இரு ஹரம் ஷரீப்களின் விஸ்தரிப்பு என்பது, யாத்திரிகர்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் உட்கட்டமைப்புகளையும் செய்து கொடுப்பதை இலக்காகக் கொண்டுள்ளது. அதனால் இது உலகின் அனைவராலும் பாராட்டி மெச்சப்படுகின்ற விடயமாக உள்ளது. சவுதி அரேபியாவை ஆட்சி செய்யும் ஆல் ஸஊத் பரம்பரையினரின் ஆட்சிக் காலத்தில் தான் கஃபதுல்லாஹ்வின் விஸ்தரிப்பு, அபிவிருத்தி பாரிய அளவில் இடம்பெற்றுள்ளது.

புனித மக்கா, மதீனா மஸ்ஜித்களுக்கு சவுதி அரேபிய ஆட்சியாளர்கள் ஆற்றிவரும் அளவிலா சேவைகளின் நிமித்தம் ‘இரு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலர்’ என்ற நற்பெயரை அவர்கள் பெற்றுக் கொள்கின்றனர். அந்த வகையில் தற்போதைய மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸும் இப்பெயரைப் பெற்றுள்ளார். இவர் இப்பள்ளிவாசல்களின் மேம்பாட்டுக்கும் இப்பள்ளிவாசல்களில் தங்கள் மார்க்க கடமைகளை நிறைவேற்றவரும் உலக முஸ்லிம்களுக்கும் அளப்பரிய சேவையாற்றி வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்லாத்தின் பிரதான கடமைகளில் ஒன்றாக விளங்கும் ஹஜ் மற்றும் உம்ராவை நிறைவேற்றும் தளங்களாக விளங்கும் புனித மக்கா, மதீனா சவுதி அரேபியாவில் அமைந்திருப்பது மாபெரும் வரப்பிரசாதமாகும்.

இங்கு வரும் அனைத்து யாத்திரிகர்களின் நலன் கருதி சவுதி அரசாங்கம் சகல விதமான ஏற்பாடுகளையும் செய்து கொடுத்து வருகிறது. குறிப்பாக விமானப் போக்குவரத்து வசதிகள், மக்கா, மதீனாவில் அதிநவீன தங்குமிட சொகுசு ஹோட்டல்கள், அதி நவீன போக்குவரத்து பஸ்கள், மக்கா, மதீனாவுக்கு இடையில் அதிநவீன சொகுசு ரயில் போக்குவரத்து வசதிகள், ஹஜ் கடமையோடு சம்பந்தப்பட்ட மினா, முஸ்தலிபா, அரபா போன்ற இடங்களிலும் அதிநவீன வசதிகளுடன் கூடிய கூடாரங்கள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் என அனைத்தும் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அதன் பயனாக புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற வருடா வருடம் இரண்டு மில்லியனுக்கு மேல் யாத்திரிகர்கள் மக்காவில் ஒரே நேரத்தில் ஒன்று கூடுகின்றனர். இரண்டு மில்லியனுக்கு மேல் மக்கள் ஒரே இடத்தில் கூடுவதும் அவர்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து கொடுப்பதும் இலகுவான காரியமல்ல. இருந்த போதிலும் அனைத்து யாத்திரிகர்களுக்கும் சவுதி அரசு சகல அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்து வருவதால் தான் அனைவரும் ஒரே இடத்தில் ஒன்று கூடி வணக்க வழிபாடுகளை இலகுவில் நிறைவேற்றிக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

ஹஜ் கடமையை நிறைவேற்றவரும் அனைத்து யாத்திரிகர்களுக்கும் சகல வசதிகளையும் முன்கூட்டியே செய்து கொடுக்க வேண்டும் என்பதற்காக உள்நாட்டு வெளிநாட்டு உம்ரா யாத்திரிகர்களைக் கூட சவுதி மட்டுப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

கஃபாவிலும் மஸ்ஜிதுன் நபவியிலும் ஹஜ் யாத்திரிகர்களின் நலன் கருதி பல்லாயிரக்கணக்கான சுத்திகரிப்பு வேலையாட்களும் பல சுத்திகரிப்பு இலக்ட்ரோனிக் வாகனங்களும் 24 மணி நேரமும் இயங்கிக் கொண்டிருக்கிறது.







மேலும் 15,000 க்கும் மேற்பட்ட மலசல கூடங்கள் 24 மணி நேரமும் திறந்து வைக்கப்பட்டுள்ளதோடு தினமும் உயர் ரக கிருமிநாசினிகள் மூலம் 5 தடவைகள் அவை சுத்தம் செய்யப்படுகிறது. மேலும் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குளிரூட்டப்பட்ட ஸம்ஸம் நீர்த் தாங்கிகள் பல இடங்களிலும் வைக்கப்பட்டுள்ளதோடு அந்நீர்த் தாங்கிகள் தினமும் பல முறை நிபுணர்களால் பரீட்சிக்கப்பட்டும் வருகிறது. அத்தோடு யாத்திரிகர்களின் நலன் கருதி அவர்களது பெறுமதியான பொருட்களைப் பாதுகாத்து வைக்கவென பல்லாயிரக்கணக்கான உயர் ரக பாதுகாப்புப் பெட்டிகள் பல இடங்களில் வைக்கப்பட்டுள்ளது. மக்கா, மதீனாவின் திறந்த வெளியரங்குகளில் மார்பல்கள் வெப்பத்தைத் தனித்து குளிரை அளிக்கும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளதும் விஷேட அம்சமாகும்.

மேலும் ஹஜ் கிரியைகள் மற்றும் இதர மார்க்க விடயங்கள், குர்ஆன் விளக்கங்கள், ஜும்ஆப் பிரசங்கங்கள் என்பன 65 மொழிகளில் இடம்பெறுகிறது.

யாத்திரிகர்களில் நோயாளிகள் வயோதிபர்கள் ஆகியோரின் நலன் கருதி பல்லாயிரக் கணக்கில் சிறு கதிரைகள் இலவசமாக விநியோகிக்கப்படுவதோடு அவர்களை ஏற்றிச் செல்லவென 500 க்கும் மேற்பட்ட இலத்திரனியல் வாகனங்களும் பயன்படுத்தப்படுகிறது. மக்கா, மதீனா மற்றும் புனித இடங்களுக்குச் செல்லும் அனைத்து யாத்திரிகர்களுக்கும் உயர் ரக சுகாதார கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளையும் சவுதி அரசு செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறது.

சில வருடங்களுக்கு முன் இலங்கை ஹாஜி ஒருவருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டதும் உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று பரீட்சித்த போது அவரது இருதயத்தில் இரு அடைப்புகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அவருக்கு உடனடியாக இலவசமாக இருதய அறுவை சிகிச்சை அளிக்கப்பட்டது. இது ஹாஜிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினராலும் பெரிதும் வரவேற்கப்பட்டது.

அதேநேரம் சவுதி மன்னருடைய தனிப்பட்ட செலவில் ஏழைகள், அகதிகள், உலமாக்கள், புத்திஜீவிகள் மாத்திரமல்லாமல் பலஸ்தீனத்தை சேர்ந்தவர்களுமாக சுமார் ஐயாயிரம் பேர் வருடா வருடம் உலகெங்கில் இருந்தும் இலவசமாக ஹஜ்ஜுக்காக புனித மக்காவுக்கு அழைத்து வரப்படுகின்றனர். இதுவும் சவுதி அரசு செய்கின்ற சேவைகளில் மிக முக்கியமான சேவையாகும்.

அதனால் ஹஜ், உம்ரா யாத்திரிகர்களுக்கு அளப்பரிய சேவைகள் வழங்கவென சவுதி அரேபியா பாரிய கட்டமைப்பு வசதிகளையும் கொண்டுள்ளது. இதன் நிமித்தம் இஸ்லாமிய கலாசார அமைச்சும் ஹஜ் விவகார அமைச்சும் அவற்றுக்கு மிகத் தகுதியான அமைச்சர்களும் மாத்திரமல்லாமல் தலைமைத்துவ சபையொன்றும் அமைக்கப்பட்டு அவற்றின் ஊடாகவும் இந்த அளப்பரிய சேவைகளை சவுதி முன்னெடுத்து வருகிறது.

ஹஜ், உம்ரா யாத்திரிகர்களின் நலன் கருதி சவுதி ஒவ்வொரு வருடமும் புதிய புதிய கண்டுபிடிப்புகளையும், இலகு வழி முறைகளையும் பயன்படுத்தி யாத்திரிகளுக்கு அளப்பரிய சேவையாற்றிவரும் சவுதி அரேபிய ஆட்சியாளர்களின் கைகளில் புனித மக்கா, மதீனா இருப்பது உலக முஸ்லிம்களுக்கே பெருமையாகும்.

அந்த வகையில் இவ்வருட ஹஜ் காலம் தற்போது ஆரம்பமாகியுள்ளது. இம்முறையும் கடந்த வருடத்தைப் போன்று இருபது இலட்சத்துக்கும் மேற்பட்ட ஹஜ் யாத்திரிகர்கள் மக்காவில் ஒன்றுகூடுவர் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இலங்கையில் இருந்தும் சுமார் 3500 பேர் ஹஜ் கடமைக்காக செல்லவிருப்பது குறிப்பிடத் தக்கது. அவர்களுக்குரிய சகல ஏற்பாடுகளையும் இலங்கையிலுள்ள சவுதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானியும் சவுதி தூதரகமும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் சிறப்பாக மேற்கொண்டுள்ளது.

ஹஜ் யாத்திரிகர்கள் முழுமையான பாதுகாப்பு சூழலிலும் மன அமைதியுடனும் அனைத்து அடிப்படை வசதிகளுடனும் தங்களது கடமைகளை இனிதே நிறைவேற்றிட சவுதி அரசு இரவு பகலாக தன்னலம் பாராது, அல்லாஹ்வின் விருந்தாளிகளின் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு அர்ப்பணிப்புகளுடன் சேவைகளை மேற்கொண்டு வருகிறது.

எனவே சவுதி அரேபிய ஆட்சியாளர்களான ஆல் ஸஊத்தின் பொறுப்பின் கீழ் புனித மக்கா, மதீனா இருப்பது உலக முஸ்லிம் களுக்கு பெருமைக்குரியது என்பதை மீண்டும் உறுதிபடக் கூறியவனாக, எல்லாம் வல்ல அல்லாஹ் சவுதி அரசைப் பொருந்திக் கொள்வதோடு அந்நாட்டு ஆட்சியாளர்களையும் பொருந்தி அவர்கள் தொடர்ந்தும் சேவை செய்ய நல்லாரோக்கியத்தை வழங்கிடப் பிரார்த்திக்கிறேன்.



# கல்முனை மற்றும் மாளிகைக்காட்டில் 'கல்வேலி' பாதுகாப்பு செயற்றிட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைப்பு

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

கல்முனை கடற்கரைப்பள்ளி வாசல் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதியுடன் மாளிகைக்காடு மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் அண்மைக்காலமாகத் தீவிர மடைந்து வரும் கடலரிப்பு அபாயத்தைத் தடுக்கும் பொருட்டு, கல்வேலி அமைக்கும் பணிகள் (23) வியாழக்கிழமை உத்தியோக பூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன.

இன்று நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதிமைச்சர் வசந்த பியதிஸ்ஸ மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா





ஆகியோர் கலந்துகொண்டு இப் பணிகளை ஆரம்பித்து வைத்தனர்.

மக்களின் நீண்ட காலப் ப ிரச்சினையான கடல் அரிப்பு பிரச்சினைக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஆதம்பாவா இதற்கு முன்னரும் பல நடவடிக்கைகள் எடுத்து வெற்றி கண்ட போதிலும் எஞ்சியுள்ள சில பகுதிகளுக்கும் கல்வேலி இட்டு பாதுகாக்கும் பணி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# சீனன்கோட்டை மதாரிஸ் செயலக ஏற்பாட்டில் மாணவர்களுக்கான எழுத்துப் பரீட்சை





**(பீ.எம்.முக்தார்)**

பேருவலை சீனங் கோட்டை பள்ளிச் சங்கத்தின் கீழ் இயங்கும் 13 மதரஸ ாக்களுக்கிடையில் 4ம் ஆண்டு மற்றும் 5ம் ஆண்டு மாணவர்களுக்கான எழுத்துப் பரீட்சை அல் ஹுமைஸ ரா தேசிய பாடசாலையில் (25) இடம்பெற்றது.

இப்பரீட்சையில் 150 மாணவ, மாணவிகள் தோற்றினர். சீனன்கோ ட்டை குர்ஆன் மதாரிஸ் செயலகம் ஏற்பாடு செய்த இப்பரீட்சையின் ஆரம்ப நிகழ்வு மேற்படி குர்ஆன் மதாரிஸ் செயளக பணிப்பாளர் மௌலவி எம்.டப்ளியூ.எம்.பஹ்ருத்தீன் (மிஸ்பாஹி) தலைமையில் நடைபெற்றது.

சீனன்கோட்டை பள்ளிச் சங்கத்தின் உப தலைவரும், குர்ஆன் மதாரிஸ் பொறுப்பாளருமான அல்ஹாஜ் அஷ்ஷைய்க் எம்.எஸ்.எம் ரிழ்வான் (நளீமி), இணைச் செயளாளர்களான அல்ஹாஜ் கலீபதுஷ் ஷாதுலி அஷ்ஷை ய்க் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி) ,அல் ஹாஜ் ரமழான் அஷ்ரூஸ் ,சீனங் கோட்டை பாஸிய்யா ஜு/ம்மா மஸ்ஜித் பிரதம இமாம் கலீபதுஷ் ஷ ாதுலி மௌலவி அல் ஹாஜ் எம்.ஐ.எம். ரபீக் (பஹ்ஜி) மற்றும் சிரேஷ்ட ஊடகவியாளர் அல் ஹாஜ் பீ.எம்.முக்தார் ஆகியோர் உற்பட குர்ஆன் மத்ரஸா அதிபர்கள், மற்றும் முஸ்லிம்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# கஹட்டோவிட்டவில் ஜனாஸா வாகன அங்குரார்ப்பண நிகழ்வு:

**நீண்டகாலத் தேவை நிவர்த்தி!**

கஹட்டோவிட்ட மற்றும் அதனைச் சூழவுள்ள கிராம மக்களின் நீண்டகாலத் தேவையாக இருந்த ஜனாஸா போக்குவரத்து சேவை, புதிய வாகனமொன்று கொள்வனவு செய்யப்பட்டதன் மூலம் நேற்று முன்தினம் (25) உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கஹட்டோவிட்ட அல் பத்ரியா மகா வித்தியாலய வளாகத்தில் நடைபெற்ற இந்த விசேட நிகழ்வில், சுமார் 60 இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய புதிய ஜனாஸா வாகனம் ஜனாஸா நலன்புரிச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

மக்கள் பங்களிப்புடன் கூடிய பாரிய திட்டம்

இந்த வாகனம் கொள்வனவு செய்யப்படுவதற்காக கஹட்டோ விட்ட, குரவலான, ஓகொடபொல மற்றும் உடுகொடை ஆகிய ஊர்களைச் சேர்ந்த பொதுமக்கள், நலன்விரும்பிகள் மற்றும் தனவந்தர்கள் ஒன்றிணைந்து நிதிப் பங்களிப்பு செய்திருந்தனர்.

குறிப்பாக:

சிறுவர்கள் தமது சேமிப்பு உண்டியல்கள் மூலம் வழங்கிய பங்களிப்பு.

தனிநபர்கள் வழங்கிய 100 ரூபாய் முதற்கொண்ட சிறு நிதி உதவிகள்.










தனவந்தர்கள் மற்றும் பரோபகாரி களின் பாரிய நிதியுதவிகள்.

இப்பணியில் ஜனாஸா கமிட்டியின் தலைவர் மொஹம்மத் Azfer (அப்பர்) தலைமையிலான குழுவினர் மற்றும் ஊர் முக்கியஸ் தர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# மாதம்பை அல் மிஸ்பாஹ்வில் க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு









**(எம்.எச்.எம்.சியாஜ்)**

2025 ஆம் ஆண்டு க.பொ.த உயர் தர பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வானது மாதம்பை அல் மிஸ்பாஹ் பாடசாலையில் அதிபர் எஸ்.எல். அன்வர் தலைமையில் (23) நடைபெற்றது.

இந்நிகழ்வில் அதிபர் எஸ்.எல். அன்வர் தலைமையுரை நிகழ்த்திய தோடு க.பொ.த உயர் தர ஆசிரியர்களான எம்.யூ.எம். அஸ்ரம் மற்றும் ஏ.கே. உபைதுல்லாஹ் ஆகியோரின் பங்கேற்பின் கீழ் உரிய மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் 2025 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரம் எழுதிய மாணவர்கள், அவர்களது பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர், மெஸ்டா அமைப்பினர் மற்றும் உயர் தர செயற்றிட்டத்திற்கு நிதியுதவி வழங்கிய இக்ரா அமைப்பினரும் கலந்து சிறப்பித்தனர்.

இம்முறை மாதம்பை அல் மிஸ்பாஹ்வின் உயர்தர பெறு பேறானது அவ்வூரின் வரலாற்று சாதனையாக பதிவாகியுள்ளதாக அதிபர் எஸ்.எல்.அன்வர் இதன் போது தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.




பாரா தாஹிர்
சிரேஷ்ட ஊடகவியலாளர்

## விடுகதைகள்

1. கை உண்டு விரல் இல்லை, கழுத்து உண்டு தலை இல்லை. அது என்ன?
2.பச்சைப் பெட்டிக்குள் வெள்ளை முத்துக்கள். அது என்ன?
3.வீட்டுக்கு வந்த விருந்தாளியை வரவேற்க ஆளில்லை. அது என்ன?
4.கண்ணால் பார்க்கலாம் கையால் பிடிக்கமுடியாது அது என்ன?
5.அடித்தாலும், உதைத்தாலும் அவன் அழ மாட்டான், அவன் யார்?

**விடைகள்**

1.சட்டை
2.வெண்டைக்காய்
3.செருப்பு
4.நிழல்
5.பந்து

ஸல்ஹா ஸைத்
தரம் -2
அல் அரபா ஆரம்ப பாடசாலை
திப்பிடிய

படைப்பாற்றலை ஊக்குவித்து, பொது அறிவை வளர்த்து, பொழுது போக்குடன் கல்வியறிவை வளர்த்து, சிறாரிடத்தில் வாசிப்பை ஊக்குவிக்கும் நோக்கில் "உதய பூங்கா " எனும் சிறுவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பகுதியில் உங்கள் ஆக்கங்களை கட்டுரையாக, கவிதைகளாக, துணுக்குகளாக, விடுகதைகளாக, சிறுகதைகளாக, பிறந்தநாள் வாழ்த்தாக, சித்திரங்களாக, பாடசாலையில் நடைபெறும் நிகழ்வுகளாக இவ் வட்சப் இலக்கத்திற்கு **0775323239** அனுப்பலாம்.

## அம்மாவின் பிட்டு

மாவையும் நீரையும்
இரண்டையும்
சேர்த்து....
தேங்க
காயும் உப்பும்
போட்டு பிசைந்து
பிசைந்து....
அறுசுவையுடன்
உண்டு மகிழ்ந்திட
அம்மா தருவாளே
அருமைப்பிட்டு....

பவளங்கள் போல
மினிமினுக்குதே...
எங்கள் அகத்திலும்
பல புன் முருவல்
கொண்டு வருமே....
சில்லு பிட்டு குழல்
பிட்டு என்றே
ஆழ்கனவிலும்
வருதே அம்மாவின்
பிட்டு...
மொத்தத்தில் நானும்
அதன் அழகில்
மயங்குகிறேனே....

கவளம் கவளமாய்
அள்ளி உண்ணும்போது....
எங்கள் களைப்பை
நீக்கி....
பல இன்பங்கள் கொண்டு வருது....
இன்னொரு தடவையும் கை நீட்டி
கேட்கத்துடிக்குது....
அப்பப்பா சொர்க்கம்
என்றே சொல்லவும்
தோணுது....



N. யூசுப்
தரம் -07
பஃபோகஹாகும்புர
முஸ்லிம் வித்தியாலயம்.

## சிறுவர் சித்திரங்கள்



முகமட் ரைஹான்
தரம் 4 A
Sussex International school, கண்டி



ஐ. ஆ. இமாத்
தரம் 4
நூராணியா மு. ம. வி
உயன்வத்த

## என் அம்மா



என் அம்மா அழகானவர்.
அன்பானவர்.
என்னை மிகவும் நன்றாக,
குறையின்றி கவனிப்பார்.
பாடசாலை பாடங்களை
தவராது நன்றாக
சொல்லித் தருவார்.பெரியார்
வரலாற்றுக் கதைகளையும்
சொல்லித் தருவார்.
எனக்கு அம்மாவை நன்றாகப் பிடிக்கும்.

அஹமட் ரஸா.
தரம் : 3/V
மட்/ மம/ பசீர் சேகுதாவூத் வித்தியாலயம்
ஏறாவூர்.

## ஒழுக்கம்

1.நிழலும்
நிஜமும்: உன்
நிழல் உன்னை
விட்டுப் பிரியலாம்,
ஆனால் நீ செய்த நல்ல
ஒழுக்கமான செயல்கள் உன்னை
விட்டு என்றுமே பிரியாது.
2. வெற்றிக்கு வழி:திறமை உன்னை
உச்சிக்கு கொண்டு செல்லும், ஆனால்
இடத்தைத் தக்க வைத்துக் கொள்ள உனக்கு
'ஒழுக்கம்' அவசியம்.
3. சுய கட்டுப்பாடு: மற்றவர்களை அடக்கி ஆள்வதை
விட, உன்னை நீயே அடக்கி ஆள்வது தான்
உண்மையான ஒழுக்கம்.
4. அழகு: முகத்தின் அழகை விட குணத்தின் அழகே
ஒருவனுக்கு நிரந்தரமான மரியாதையைப் பெற்றுத் தரும்.

M. N. ஆயிஷா நஹ்தியா
தரம் 7C
கஞ/ அல் பாஸியதுல் நஸ்ரியா முஸ்லிம் மகளிர் கல்லூரி
பேருவளை

## நேர்காணல்



**ஆசிரியரும், மனநல ஆலோசகரும், ஆன்மீக வழிகாட்டியும், பயிற்றுவிப்பாளரும், பேச்சாளரும், எழுத்தாளரும், கவிஞருமான அஷ்சேக் அப்துர் ரஹ்மான் ஆசிரியரை "உதய பூங்காவில்" இன்று சந்திப்பதில் பெருமிதம் அடைகிறோம்.**

Ash-sheik. Abdurrahman Nawas (MBA)
Students' Counsellor
Baduriya College-Mawanella

**1. உங்களைப் பற்றிய அறிமுகம் கூறுங்கள்.**

எனது பெயர் அப்துர்ரஹ்மான், எனது தந்தையின் பெயர் மொஹம்மத் நவாஸ் எனது தாயின் பெயர் ருவய்தா. நான் மாவனல்லை பிரதேசத்தில் தனாகம கிராமத்தில் வசிக்கின்றேன். ஆரம்ப கல்வியை மாவனல்லை ஸாஹிறா தேசிய பாடசாலையில் பயின்ற நான், உயர் கல்வியை இஸ்லாமிய ஷரீஆ கல்வியோடு இணைத்து கெகுணகொல்ல இர்பானியா அரபுக்கல்லூரியில் தொடர்ந்தேன். கலைமானிப்படிப்பை இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் முதுமானிப் பட்டப்படிப்பை மலேஷியா பல்கலைக்கழகத்திலும் நிறைவு செய்தேன். தற்போது மாவனல்லை பதுரிய மத்திய கல்லூரியில் மாணவ உளவள ஆலோசகராக கடமையாற்றி வருகின்றேன். மாணவர்களிடத்தில் ஒழுக்கம், அறிவு, ஆற்றல் மற்றும் சமூகப் பொறுப்பை வளர்ப்பதற்கு உதவுவதே எனது பிரதானமான இலக்காகும். இளம் தலைமுறையை சரியான பாதையில் வழிநடத்த வேண்டும் என்பதே என் வாழ்நாள் கனவாகும்.

**2. உங்கள் ஆசிரியர் தொழில் பற்றி கூறுங்கள்.**

ஆசிரியர் தொழில் என்பது ஒரு சாதாரண பொறுப்பல்ல அது ஒரு புனிதப் பொறுப்பு. மாணவர்களின் எதிர்காலத்தை வடிவமைக்கும் முக்கியமான பாத்திரம் ஆசிரியரையே சாரும். ஆசிரியர் என்ற பாத்திரத்தையும் தாண்டி ஒரு உளவள ஆலோசகராக குறிப்பாக மாணவர் விவகாரத்திலும் மேலும் பெற்றார்கள், ஆசிரியர்கள் மற்றும் நிருவாகத்திற்கும் கூடுதல் பொறுப்புள்ளவராக இருக்கின்றேன். மாணவர்கள் தமது இலக்கை நிர்ணயித்து சரியான திசையில் பயணிக்க வழிகாட்டுவதோடு மாணவர்களது உளவளர்ச்சிக்கு ஏற்ப குறிப்பிட்ட வயதுக்கு அமைய வழிதவறுவதிலிருந்து விழிப்பூட்டி திசைப்படுத்துகின்ற கடமையையும் செய்து வருகின்றேன். குறிப்பாக கற்றல் இடர்பாடுகளால் கஷ்டப்படுகின்ற மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு தேவையான பயிற்சிகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்குவதோடு நெறிபுறழ்வகளுக்குட்பட்ட மாணவர்களையும் தனியாக இனங்கண்டு அவர்களுக்கும் தேவையான பயிற்சிகளை வழங்கி அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்துவருகின்றேன். குறிப்பாக பாடசாலையை மாணவர்களுக்கு பொருத்தமான கற்றல் சூழலாக அமைத்துக் கொடுக்க கனிசமானளவு முயற்சியெடுத்து வருகின்றேன். மறுபுறம் நிருவாகத்துடன் இணைந்து பெற்றார்கள், ஆசிரியர்களுக்குத் தேவையான விழப்பூட்டல் மற்றும் வழிகாட்டல்களையும் தொடர்ச்சியாக செய்து வருகின்றேன். இவற்றையும் தாண்டி மாணவ உளவள ஆலோசகராக தமிழ் மொழிமூல அயல்

(தொடர் அருவிக்கரைப் பக்கத்தில்...)

## குட்டிக்கதை

## ஆபத்தில் உதவி



தாமரைத் தடாகம் ஒன்றிலே ஐந்து வண்ண மீன்கள் நண்பர்களாக வாழ்ந்து வந்தன.
அவை ஒவ்வொன்றும் மஞ்சள், சிவப்பு, கறுப்பு, வெள்ளை, செம்மஞ்சள் என வெவ்வேறு நிறங்களில் இருந்த போதிலும் ஒருவருக்கு ஒருவர் புரிந்துணர்வுடன் விட்டுக் கொடுத்து வாழ்ந்தன.
அந்தக் குளத்தில் ஓர் ஆமையும் நீண்ட நாட்களாக வசித்து வந்தது. அவ்வாமையின் ஓடு கரிய நிறத்தில் கரடுமுரடாக இருந்ததனால் மீன்கள் ஆமையை வெறுத்தன. எந்தவிதமான நட்புறவும் வைத்துக் கொள்ளவில்லை. ஆமையைக் கண்டும் காணாத மாதிரி நடந்து கொண்டன. இதனால் ஆமைக்கு மீன்கள் மேல் வெகுவாகக் கோபமும் மனவேதனையும் இருந்தது. இருந்தாலும் ஆமை காட்டிக் கொள்ளாமல் நடந்து கொண்டது.
மாரி காலத்தில் தடாகம் நிரம்பி வழிவதுவும், கோடைகாலத்தில் குறைவதுமாக இருந்தது. ஒருமுறை கடும் கோடை காரணமாக நீர் வற்றத் தொடங்கியது.
நீரின் சூடு தாங்க முடியாமல் அத்தடாகத்தில் வாழ்ந்த மற்றைய மீன்கள் ஒவ்வொன்றாக இறக்கத் தொடங்கின.
இந்த ஐந்து மீன்களும் அத்தடாகத்தினுள் இருந்த ஓட்டைக் கட்டை ஒன்றினுள் தங்கிக் காலத்தைக் கடத்தின.
இன்னும் இன்னும் நீர்மட்டம் குறைய இந்த வண்ண மீன்கள் ஐந்தையும் ஆமையையும் தவிர மற்றைய மீன்கள் எல்லாமே இறந்தன.
அப்போது ஆமை அந்த மீன்கள் வசிக்கும் இடத்திற்கு வந்து நண்பர்களே இனிமேலும் நம்மால் இங்கே வாழ முடியாது.
வேறு தடாகத்தையோ குளத்தையோ நாடுவதே மேல் .
நானோ எப்படியாவது வேறு இடங்களுக்கு நகர்ந்து விடுவேன்.
உங்களை விட்டுச் செல்ல எனக்கு மனமில்லை.
நீங்கள் விரும்பினால் எனது முதுகில் ஏறிக் கொள்ளுங்கள் நான் எனக்குத் தெரிந்த குளத்தில் விட்டு விடுகிறேன் என்றது.
இப்போது மீன்களுக்கு அதனுடன் செல்வதைத் தவிர வேறு வழியில்லை .
சற்று நிதானித்து ஆமோதித்தன.
ஆமையும் மீன்களை ஒவ்வொருவராக முதுகிலே சுமந்து பெரிய ஆறு ஒன்றிலே சேர்த்தது. தானும் அவ்வாற்றிலேயே வாழத் தொடங்கியது.
மீன்கள் வெட்கித்தபடி ஆமையிடம் மன்னிப்புக் கேட்டு நண்பர்களாயின.
நாம் ஒருவரின் உருவத்தையோ நிறத்தையோ வைத்து யாரையும் குறைவாக எடை போடக் கூடாது.
**நன்றி**

அஹமட் முர்ஷி அல் பவ்சி
தரம் ஐந்து
அல் அஸ்ஹர் மகா வித்தியாலயம்
கல்லேல பொலன்னறுவை

# வெளிவாரி கல்விப் பயணத்தைத் தொடங்கிய கலை இளமாணி மாணவர்கள் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் வழிகாட்டல் நிகழ்வு






( எம்.என்.எம். அப்ராஸ்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் வெளிவாரி கற்கைகள் மற்றும் தொழில்சார் கற்றல் நிலையம் ஏற்பாடு செய்திருந்த 2022/2023 கல்வியாண்டிற்கான கலை இளமாணி பட்டப்படிப்பின் அங்குரார்ப்பண நிகழ்வும் வழிகாட்டல் கருத்தரங்கும் (25) ஏ.ஆர். மன்சூர் ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி எஸ். எம். ஜூனைடீன் பிரதான உரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில், வெளிவாரி பட்டப்படிப்பு என்பது எளிதான பாதை அல்ல, அது ஒழுக்கம், நேர முகாமைத்துவம், சுயமுனைப்பாடு மற்றும் விடாமுயற்சி ஆகியவற்றை வலியுறுத்தும் தனித்துவமான கல்விப் பாதை எனக் குறிப்பிட்டார்.

மேலும், குடும்பப் பொறுப்புகள் மற்றும் தொழில் வாழ்க்கையுடன் இணைந்து கல்வியைத் தொடரும் மாணவர்களின் உறுதியை அவர் பாராட்டியதுடன், வழங்கப்படும் கற்றல் வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி கல்விப் பயணத்தை பொறுப்புடன் முன்னெடுக்குமாறும் கேட்டுக்கொண்டார். வெளிவாரி மற்றும் உள்வாரி பட்டப்படிப்புக ளுக்கு இடையில் தரத் தளத்தில் எந்தவித வேறுபாடும் இல்லை யெனவும், கடுமையான சேர்க்கை மற்றும் மதிப்பீட்டு முறைகள் மூலம் கல்வித் தரம் உறுதிப்படுத்தப்படுவ தாகவும் அவர் வலியுறுத்தினார்.

வெளிவாரி கற்கைகள் மற்றும் தொழில்சார் கற்றல் நிலையத்தின் வளர்ச்சியையும் அவர் சுட்டிக் காட்டினார்.

கடந்த காலங்களில் மந்தமாக இருந்த இந்த நிலையம் தற்போது பல்வேறு பட்டப்படிப்புகள் மற்றும் பயிற்சித் திட்டங்களை முன்னெடுத்து பல்கலைக்கழகத்தின் முக்கிய கல்வி விரிவாக்க நிலையமாக வளர்ந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

முன்னாள் செயற்பாட்டு பணிப்பாளராக பணியாற்றிய கலாநிதி சபீனா அவர்களின் பங்களிப்பையும் அவர் பாராட்டினார். மேலும், பல்கலைக் கழகங்கள் குறைந்த வளங்களுடனும் நிதி கட்டுப்பாடுகளுடனும் செயல்பட்டு வருவதாகக் குறிப்பிட்ட அவர், இந்நிலையிலும் சமூகத்திற்கான கல்வி சேவையை விரிவுபடுத்தும் பொறுப்பை தொடர்ந்து ஏற்று வருவதாக தெரிவித்தார். வெளிவாரி மாணவர்கள் இந்த வாய்ப்புகளை பொறுப்புடன் பயன்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தி, வெளிவாரி பட்டப்படிப்புகளில் மூன்று ஆண்டுகளுக்குள் பட்டம் பெறும் மாணவர்களின் வீதம் சுமார் 10–15% மட்டுமே உள்ளதெனக் குறிப்பிட்ட அவர், மாணவர்கள் தங்களது முயற்சியால் இந்த வெற்றிவிகிதத்தை உயர்த்த முடியும் என நம்பிக்கை வெளியிட்டார்.

நிகழ்வில் கலை மற்றும் கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸில் பாடத் திட்டம் தொடர்பான விரிவான விளக்க உரையாற்றினார். தனது உரையில், மாணவர்கள் வெற்றியை அடைய மூன்று முக்கியக் கோட்பாடு களையும் அவர் முன்வைத்தார்: கடின உழைப்பு, தொடர்ச்சியான முயற்சி மற்றும் இலக்கில் நிலைத்திருக்கும் மனப்பாங்கு. தற்காலிக சிதறல்கள் கல்விப் பயணத்தை பாதிக்கக்கூடும் என்பதால் அவற்றைத் தவிர்க்க வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தினார். தான் ஒரு வெளிவாரி மாணவராக கல்வி கற்ற அனுபவத்தையும் பகிர்ந்த அவர், உறுதியும் முயற்சியும் இருந்தால் வெளிவாரி பட்டப்படிப்பிலும் வெற்றி பெற முடியும் என மாணவர்களை ஊக்குவித்தார்.

கல்வி தனிப்பட்ட முன்னேற்றத்திற்கே அல்லாது பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் சமுதாயத்தின் பெருமையாகவும் அமைய வேண்டும் எனக் கூறினார்.

இந்த நிகழ்வில் முகாமையத்துவ மற்றும் வர்த்தக பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி ஏ.எம்.எம். முஸ்தபா, தர உறுதிப்படுத்தல் நிலைய பணிப்பாளர் பேராசிரியர் கலாநிதி எம்.ஐ.எம். ஹிலால், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான எம்.ஐ.எம். சமீம், வெளிவாரி கற்கைகள் மற்றும் தொழில்சார் கற்றல் நிலையத்தின் பிரதி பணிப்பாளர்களான சிரேஷ்ட விரிவுரையாளர் சரீனா யூ.எம்.ஏ. கபூர், கலாநிதி எம்.ஐ.எம். றியாத், சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.எல். சரீப்டீன், சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ. பாத்திமா தஹாரா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் சுமார் 700 மாணவர்கள் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டமை சிறப்பம்சமாகும்.

# கல்விசாரா ஊழியர்களின் பதவி உயர்வு மற்றும் பிரச்சினைகள் குறித்து முக்கிய கலந்துரையாடல்

(கே.எ.ஹமிட்)



கிழக்கு மாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் கல்விசாரா ஊழியர் களின் பதவி உயர்வு மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் தொழில் சார்ந்த பிரச்சனைகள் தொடர்பான முக்கிய கலந்துரையாடல் (26) நிகாப் வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வு இலங்கை கல்விசாரா ஊழியர்கள் ஒன்றிணைந்த சங்கத்தின் உதவிச் செயலாளர் ஏ.எம். ஜமீல் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கல்விசாரா ஊழியர்களின் பல்வேறு பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன், பின்வரும் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன: கல்விசாரா ஊழியர்களின் பதவி உயர்வு நடவடிக்கைகளை விரைவு படுத்தல், கிழக்கு மாகாணத்தில் பாடசாலைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்காக முகாமைத்துவ உதவியாளர் பரீட்சையை நடத்த நடவடிக்கை எடுக்குதல், கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளரை சந்தித்து பிரச்சினைகள் குறித்து கலந்துரை யாடுதல், ஜனாதிபதி மற்றும் பிரதமரை சந்தித்து கோரிக்கைகளை முன்வைத்தல், மத்திய அரசின் கல்வி அமைச்சின் கீழ் உள்ள கல்விசாரா ஊழியர்களுக்கான பீ.எல்1 சேவைப் பிரமாணக் குறிப்பு அனைத்து மாகாணங்களிலும் ஒரே மாதிரியாக அமைய வேண்டும் என கோரிக்கை விடுத்தல், கல்விசாரா ஊழியர்களின் வேலை நேரம் தொடர்பான பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்குதல் போன்ற முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டது.

மேலும் இந்தக் கலந்துரையாடல் மூலம் கல்விசாரா ஊழியர்களின் உரிமைகள் மற்றும் நலன்களை உறுதிப்படுத்துவதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



கெப்பித்திகொல்லாவ கோட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற கரப்பந்தாட்ட போட்டியில் பங்குபற்றிய முஸ்லிம் அட்டவீரவெவ பாடசாலையின் 16 வயதிற்குட்பட்ட அணியினர் முதலிடத்தைப் பெற்று (ஊாயஅிழைபெ) தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(படம் :- எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம் )

# மாவனல்லை ஸாஹிராவில் புதிய அதிபராக அனீஸ் அபூபைதா பதவி ஏற்பு



(பாரா தாஹீர்)

கேஃமாவனல்லை ஸாஹிரா தேசிய பாடசாலையின் 56ஆவது அதிபராக புத்தளம் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வந்த முதல் தர இலங்கை கல்வி நிர்வாக சேவையின் சிரேஷ்ட உத்தியோகத்தரான எம். ஏ.எம். அனீஸ் அபூபைதா நியமிக்கப் பட்டுள்ளார்.

மாவனல்லை ஸாஹிரா தேசிய கல்லூரியின் இடைக்கால அதிபர் அதாவுர் ரஹ்மான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதி அதிபர்கள் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவ சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# வட மத்திய ஆளுனர் தலைமையில் காணி உரிமம் வழங்கும் நிகழ்வு




(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம் )

கெப்பித்திகொல்லாவ மற்றும் ஹொரவப்பொத்தானை பிரதேச செயலகங்களில் நடமாடும் சேவை மூலம் காணி உரிமம் வழங்கும் நிகழ்வு வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச , அனுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்த குமார நவரத்ன , பி.டி.என். கே.பலிஹேன ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

நீண்ட காலமாக காணி உரிமை பத்திரம் இன்றி அரசாங்க நிலங்களை ஆக்கிரமித்திருந்த மக்களுக்கு நடமாடும் சேவையின் மூலம் தகுதி பெற்ற விவசாயிகளுக்கு நில அபிவிருத்தி அவசரச் சட்டத்தின் கீழ் கெப்பித்தி கொல்லாவ பகுதியைச் சேர்ந்த 607 விவசாயிகளுக்கும் ஹொரவப் பொத்தானை பிரதேச செயலகப் பகுதிக்குட்பட்ட 150 விவசாயி களுக்கும் காணி உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

இதன் போது பிரதேச அரசியல் வாதிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# அகவை எண்பதில் கால் பதிக்கும் இடதுசாரி அரசியல்வாதி

## அல்ஹாஜ் அலி பாரூக்

24 ஆம் திகதி அகவை எண்பதில் கால் பதிக்கும் பிரபல அரசியல் பிரமுகரும் சட்டத்தரணியும் ஆசிரியருமான அல்ஹாஜ் அலி பாரூக் அவர்கள் தெஹியோவிட்டவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தெஹியோவிட்டவில் பாரம்பரிய முஸ்லிம் குடும்பத்தின் ஓர் அங்கத்தவரான இவர், ஆரம்ப காலத்தில் கல்வி கற்று ஆசிரியராகப் பதவியேற்றார். பின்பு அரசியலில் ஈடுபட்டார். இலங்கை இடதுசாரி அரசியலில் முக்கியமான ஒருவராக பாஷரூக்கை அறிமுகப்படுத்தலாம். இவர் கம்பளை சாஹிராக் கல்லூரியில் ஆசிரியராகப் பணி புரிந்தார். நீண்ட காலம் அங்கு பணிபுரிந்து முஸ்லிம் சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்கு சிறப்பான பங்களிப்பை வழங்கினார். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாக இருந்த இவர், அங்கு இடதுசாரி மாணவர் சங்கத்தின் லங்கா சமசமாஜக் கட்சியின் மாணவர் சங்கத்தின் முக்கிய அங்கத்தவராக இருந்தார்.

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் சங்கத் தேர்தலில் போட்டியிட்டு 1964, 65 ஆம் ஆண்டுகளில் இவர் வெற்றி பெற்றார்.

பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றில் இதுவரை சிறுபான்மையினத்தைச் சேர்ந்த ஒருவரும் தெரிவாகி இருக்கவில்லை. பாரூக் அதில் சாதனை படைத்தார்.

பாஷரூக் அவர்கள்

முஸ்லிம் சமூகத்தின் கல்வி மேம்பாட்டுக்காக அளப்பரிய பங்களிப்புகளைச் செய்திருக்கின்றார். மர்/ஹும் அல்ஹாஜ் நளீம் ஹாஜியாரின் இஸ்லாமிய மறுமலர்ச்சியின் இயக்கத்தின் ஒரு முக்கிய தூணாக அவர் பணியாற்றியுள்ளார். பல வருட காலம் நாட்டில் உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு பண உதவியை மறுமலர்ச்சி இயக்கம் வழங்கியது. அதன் பொறுப்பாளராக இருந்து தகுதியானவர்களைத் தேடித் தேடி பணத்தை வழங்கியுள்ளார்.

அது அவரது சிறப்பானதொரு பங்களிப்பாகும். 1977 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் வந்தபின் அவர் அரசியல் காரணங்களுக்காக இடமாற்றப் பட்டார். கொழும்புக்கு இடமாற்றப்பட்ட அவர், அது அவருக்கொரு பெரு நன்மையாக அமைந்தது. சட்டக் கல்லூரியில் இணைந்து சட்டத்தரணியானார். ஆசிரியர் தொழிலை துறந்து விட்டு அவர் சட்டக் கல்லூரியில் படித்து ஒரு பிரபல சட்டத்தரணியானார்.

மர்/ஹும் நளீம் ஹாஜியாருடைய மறுமலர்ச்சி இயக்கம் நாட்டில் உள்ள வசதி குறைந்த முஸ்லிம் மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்கியது. அந்த செயற்றிட்டத்தை இவரே பொறுப்பாக இருந்து அமுல் நடத்தினார். எங்கெங்கெல்லாம் அப்படிப்பட்டவர்களை தேடி



இவர் அந்தப் புலமைப் பரிசில்களை மாதா மாதம் வழங்க நடவடிக்கை எடுத்தார். இதனால் நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு உயர்கல்வியைத் தொடர வாய்ப்புக் கிடைத்தது. தனது ஆசிரியர் தொழிலைத் துறந்து விட்டு சட்டத்தரணியான அல்ஹாஜ் பாஷரூக் அவர்கள், பல சமூகப் பணிகளிலே நீண்ட காலமாக ஈடுபட்டு வந்தார். அரசியலில் ஈடுபட்ட இவர், கேகாலை மாவட்டத்தின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுனவில் தேர்தலில் போட்டியிட்டார். அவர் வெற்றி பெறாத போதும் கேகாலை மாவட்டத்தின் சிறுபான்மை மக்கள் வாழும் கிராமங்களுக்கும் பெரும் சேவைகளைச் செய்தார். அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி நெடுஞ்சாலை அமைச்சராக இருக்கும்போது கேகாலை மாவட்டத்திற்கு தான் 16 பாதைகளை அமைத்துக் கொடுத்தது பற்றி என்னைச் சந்தித்தபோது நினைவுபடுத்தினார். இப்படி பல சேவைகளை தனது செல்வாக்கைப் பயன்படுத்தி, பல பாடசாலைகளுக்கு கட்டடங்களை அமைத்துக் கொடுத்தார். மாவனல்லை சாஹிரா உட்பட பிற பல பாடசாலைகளுக்கெல்லாம் இவரது உதவி வழங்கப்பட்டது.

இவர் துணிச்சலாக சமூக ஊடகங்களில் பேசி வந்தார். கேகாலை மாவட்டத் தேர்தலில் பொதுஜன பெரமுன சார்பில் இவர் போட்டியிட்டார். வெற்றி பெறாத போதும் அதன் ஊடாக அந்த அரசாங்கத்தின் அமைச்சர்களைப் பயன்படுத்தி பல சேவைகளைச் செய்தார். சமசமாஜக் கட்சியின் முக்கிய அங்கத்தவராக இருந்த இவர், இவருடைய வாழ்வில் முக்கியமாக பேராதனைப் பல்கலைக் கழகத்தின் மாணவர் சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டது பெரும் சாதனையாகும். சிறுபான்மை மாணவர் ஒருவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மாணவர் சங்கத் தலைவராக தெரிவு செய்யப்பட்ட மிக சந்தர்ப்பம் இதுவாகும். என் நினைவுப்படி இதற்குப் பிறகும் ஒரு முஸ்லிம் தெரிவானது.

ஐந்து பெண் பிள்ளைகளின் தந்தையாரான இவரது பிள்ளைகளெல்லாம் சிறந்த கல்விமான்களாக உருவாகி இருக்கிறார்கள். ஐந்து பேரில் நாலு பேர் நேரடியாக வைத்தியத்துறையில் ஈடுபட்டிருக்கின்றார்கள். ஒரு மகள் அமெரிக்காவின் வைத்தியப் பேராசிரியராக இருக்கின்றார். மற்றவர்களும் வைத்தியத்துறையில் ஒவ்வொரு துறையிலும் இன்றும் பணிபுரிந்து வருகிறார்கள். இவரது அன்பு மனைவி ஹினாயா ஆசிரியை கம்பளையைச் சேர்ந்தவர். கம்பளை சாஹிராக் கல்லூரியில் நீண்ட காலமாக பணிபுரிந்து கல்விப் பணிக்கு அளப்பரிய சேவையை ஆற்றியுள்ளார். இவரை அண்மையில் லண்டனில் சந்தித்த போது கடந்த கால அரசியல் விடயங்களை குறிப்பாக முஸ்லிம் அரசியல் விடயங்களை அடுக்கடுக்காகச் சொன்னார். எமது அரசியல் தலைவர்கள் விட்ட தவறுகள், நாம் எங்கே தவற விட்டோம் என்பதை அவர் நினைவுபடுத்தினார்.

ஆசிரியராக, சட்டத்தரணியாக, அரசியல்வாதியாக இவர் ஆற்றிய பங்களிப்புகள் நன்றியுடன் நினைவுகூரப்பட வேண்டும். துணிச்சலான ஓர் இடதுசாரி அரசியல்வாதியாக இவர் இருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவரை மாலைதீவுக்கான இலங்கைத் தூதுவராகவும் நியமித்திருந்தார். பல வருடங்கள் அங்கு பணி புரிந்த பின் தாய்நாடு வந்து பல கூட்டுத்தாபனங்களில் உயர்பதவிகளை வகித்தார்.

அவருடைய பணிகளில் இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கத்தில் இவர் ஆற்றிய பங்கு, அதேபோன்று இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கத்தின் ஊடாக மர்/ஹும் நளீம் ஹாஜியார் ஊடாக நூற்றுக் கணக்கான இளைஞர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வெளிநாட்டுத் தொழில்களை பெற்றுக் கொடுத்ததில் இவர் முக்கிய பங்கு வகிக்கின்றார். தேடித் தேடி இளைஞர்களை இவர் அனுப்பி வைத்தார்.

அல்ஹாஜ் பாஷரூக் ஒரு விசித்திரமான மனிதர். தனக்கு கிடைத்த ஓய்வூதியத்தையோ, சம்பளத்தையோ கூடப் பெறாது தொடர்ந்து பணிகளைப் புரிந்து வருகிறார்.

அல்ஹாஜ் பாஷரூக் அவர்களை நான் சந்தித்தபோது இவர், அனேக விடயங்களில் கூடுதலாக பொதுநலன் விடயங்களிலே கூடுதலாக அக்கறை காட்டி வந்தார். ஒரு கட்டத்தில் தனது உடமைகளை எல்லாம் தனக்குத் தெரிந்த வறுமையான, ஏழ்மையான குடும்பத்தார்களுக்கு எழுதிக் கொடுத்து விட்டு வந்திருக்கிறார். இப்படிப்பட்ட ஒரு விசித்திரமான மனிதரை இப்போது பார்ப்பது கூட ஒரு புதினம் தான். தனது மனைவியின் மறைவின் பின் கடந்த 04 ஆண்டுகளுக்கு மேலாக புலம் பெயர்ந்து லண்டன் நாட்டில் வாழ்ந்து வருகிறார். 24 ஆம் திகதி அகவை எண்பதைக் கொண்டாடும் அல்ஹாஜ் பாஷரூக் அவர்களின் சுக தேகத்துக்காக, நீண்ட கால வாழ்க்கைக்காக பிரார்த்திப்போம்.

**என்.எம்.அமீன்**
**லண்டனிலிருந்து**

---

**மங்கையொளி**

# பிள்ளைகளுக்கான கண்டிப்பும் பெற்றோரும்

**பயாஸா பாஸில்**

இன்றைய சமுதாயத்தில் பிள்ளைகளின் வளர்ச்சியில் பெற்றோரின் பங்கு மிக முக்கியமானதாகும். ஒரு குழந்தையின் நற்குணம், ஒழுக்கம், பொறுப்புணர்வு ஆகியவை பெரும்பாலும் பெற்றோரின் வழிகாட்டலாலும், அவர்களின் கண்டிப்பாலும் உருவாகின்றன.

கண்டிப்பு என்பது தண்டனை என்று பொருள் கொள்ளப்படக் கூடாது. அது ஒரு வழிகாட்டும் கருவியாகும். குழந்தைகள் தவறுகளைச் செய்வது இயல்பானது. அந்த தவறுகளைச் சரி செய்யும் நோக்கில் பெற்றோர் காட்டும் கட்டுப்பாடும் அறிவுறுத்தலுமே கண்டிப்பு ஆகும். இது அவர்களுக்கு நல்லது கெட்டது என்ன என்பதை புரிய வைக்கிறது.

ஆனால், அதிகமான கண்டிப்பு குழந்தைகளின் மனநிலையை பாதிக்கக்கூடும். கடுமையான வார்த்தைகள், அடித்தல் போன்ற செயல்கள் அவர்களை பயமுறுத்தி, தன்னம்பிக்கையை குறைக்கக்கூடும். இதனால், அவர்கள் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்த அச்சப்படுவார்கள். எனவே, பெற்றோர் அளவான கண்டிப்பை கடைபிடிக்க வேண்டும். அதே சமயம், மிகுந்த சலுகையும் நல்லதல்ல. எல்லாவற்றையும் அனுமதிக்கும் பெற்றோர்கள், குழந்தைகளை ஒழுக்கமற்றவர்களாக மாற்ற வாய்ப்புள்ளது. ஆகவே, சலுகையும் கண்டிப்பும் சமநிலையுடன் இருக்க வேண்டும்.

பெற்றோர் குழந்தைகளுடன் நட்பாக பழக வேண்டும். அவர்களின் கருத்துகளை கேட்டு புரிந்துகொள்ள



வேண்டும். தேவையான இடத்தில் மென்மையான கண்டிப்பை பயன்படுத்தி, நல்ல வழியில் நடத்த வேண்டும். இதனால் குழந்தைகள் பெற்றோரிடம் நம்பிக்கையுடன் இருப்பார்கள்.

முடிவாக, பிள்ளைகளின் எதிர்காலத்தை அமைப்பதில் பெற்றோரின் கண்டிப்பு ஒரு முக்கிய கருவியாகும். அது அன்புடன், பொறுமையுடன், சரியான அளவில் வழங்கப்பட்டால், குழந்தைகள் நல்ல மனிதர்களாக வளரும்.

நல்ல சமநிலையே சிறந்த வளர்ச்சிக்கான திறவுகோல் ஆகும்.

## அன்பான வாசகர்களே!

**அழகு மற்றும் பேஷன் ஆரோக்கியம், கல்வி, மன நலம், சமையல், வீட்டு முகாமைத்துவம் , தொழில், சுய முன்னேற்றம், சமூக விழிப்புணர்வு, கலாசாரம், பொழுது போக்கு போன்ற உங்கள் ஆக்கங்களை மங்கையொளி பக்கத்துக்கு அனுப்புங்கள்.**

0775486616

அருவிக்கரை

# நஃபீலின் 'தென்னம்படல் மறைப்பு' வழியே- 'பள்ளிக்கூடம்'



நாச்சியாரீவு பர்வீன்

## கையறும் கணம்...

இஸ்ராயீல் வந்தென்
பூவுயிர் பறிக்கையில்
இறைத்துதி செய்வேனோ...


குளிப்பாட்டும் போது நான்
குரலெடுத்துப் பாடுவேனோ...
கபனிடும் வேளையில்--ஒரு
கவிதை எழுதுவேனோ..

சந்தூக்கில் வைக்கும் நேரம்
சரித்திரம் பேசுவேனோ....

நாலு பேர் தூக்கும் போது
நல்ல படம் பார்ப்பேனோ..
குழிக்குள் வைக்கும் வேளை
குயிலோசை இரசிப்பேனோ..

மீஸான் கட்டைகள் ஊன்றும் போது..
நான்
மீசை முறுக்குவேனோ..
மண்கூட்டி அதன் மேல்
பசுங்கொடிகள் நடும்போது
பழங்கனவு காண்பேனோ..?..

ஆமீன் சொல்லி ஆட்கள்
ஏழடிசென்ற பின்
ஆறடிக்குழி
அரை அங்குலமாய் சுருங்கிடுமோ
அறுபதடியாய் விரிந்திடுமோ...
ஆரறிவர்.?



தீரன்

மின்சார மணியோசைகளில் இன்று நமது பள்ளிகள் இயங்கி வருகின்றன. கைமணி ஒன்று நம் பள்ளி முதல்வரின் மேசையில் பெரிய இடம் பிடித்து அமர்ந்திருக்கும் அந் நாட்களில். 'தென்னம்படல் மறைப்பு' ஆமாம் பள்ளிக்கூடம் தலைப்பு.. நஃபீலின் எழுத்து..

நம் அந்தக் காலத்துப் பள்ளிகள் அவற்றின் இயக்க நடவடிக்கைகள், செயற்பாடுகள் பற்றி நஃபீல் பேசுவார்.

சிலேட்டும் கறுப்புப் பென்சிலுமாய் கண்கள் உருட்டியுருட்டி உட்கார்ந்திருப்பார் நஃபீல்.. மனக் கண்ணோடு அச்சித்திரம் ஆடுகிறது.. ஆன்மா இணைக்கிறது திரும்பத் திரும்ப இந்த எழுத்தோடு கொண்டு வந்து என்னை. திரும்ப திரும்ப நான் இந்த எழுத்திலிருந்து உயிர்க்கிறேன்..

பிடிக்காத ஒரு ஆசிரியரை என்னவென்று எதிர்த்து நிற்பான் ஒரு சிறுபிள்ளை? கூர் கண்களில் அவரது கொடூர உருவத்தை தான் படித்து முடிந்தவிதத்தில், தான் புரிந்த விதத்தில் சொல்லத்தான் முடியுமா? இனி.., எப்படித்தான் தாங்குவான் அவன்? கையை உயர்த்திப் பேசவா? ஆயின், ஆசிரியரின் சர்வாதிகாரம் பேசிவிடுமே. அவன் வரைந்து வைக்கிறான் அவரை, மோசமான அவர் உருவத்தை அந்த சிலேட்டில். தலைக்குப்புற அதனை புரட்டி வைப்பான் பிள்ளை. மகா சிறுவர் உளவியலை சொல்லுகிறது நஃபீல் வரிகள்..

வாய்ப்பாடு பாடம் இன்மையால் கிடைக்கப் பெறும் தண்டனையாய் தோப்புக் கரணம், முட்டுக்காலில் உட்காரவைத்தல் இன்னபிற வற்றை வழங்கிய ஆசிரியர்கள் பற்றி...

பள்ளிகளில் பிள்ளைகளுக்கு அந்நாட்களில் அமெரிக்க அனுசரணையில் வழங்கப்படும் கெயர் விசுக்கோத்துகள் பற்றி எழுதுவார்.. அவை வழங்கப் பட்டது போல இனியதான காலங்கள் உண்டா? அவற்றுக்காக நேரம் அறிந்து வரும் காகங்கள், வந்து அமரும் கிளைகள் என் மனசிலும் இங்கு ஆடுகிறது.. பழைய காகங்களுக்கு நிறைய அனுபவம். நிறைய சூரிய உதயங்கள். நிறைய சூரிய அஸ்தமனங்கள்.இடையில் நிறைய நிறைய பகல்கள் நிறைய நிறைய அந்திகள் என்று அவை கண்டவை அனந்தம். வானத்தின் ஞானத்தை பல்லாண்டுகளுக்கும் கண்டன பறவையின் கண்கள். எனினும் காகங்கள் பிழையாகவே புரிந்து கொள்ளப்பட்டபறவை இனம் இன்றளவும்..

இருத்தலுக்கான போராட்டத்தைச்சொல்லும் அதேவேளை, தனது இருத்தலுக்கும், நிலைத்தலுக்குமான மென்மையான இடமாக இந்தபிரபஞ்சத்தை வேறுவகை அன்போடு வித்தியாசமாக மாற்றியும் பார்க்கிறார் நஃபீல்.

அன்பின் கண்களில் அவர் கொண்டு வருவது ஓராயிரம் காட்சிகள்.எவரோடும் அவர் கோபத்தை, சினத்தை, எரிச்சலை காட்டவில்லை.

அப்படி அப்படியே முன் வைக்கிறார் பார்த்த உலகத்தை. மிக எளிய உண்மைகளாக அவர் அனைத்தையும் முன் வைக்கிறார். மனிதருக்கு என்றும், குருவிக்கு என்றும் விலங்குகளுக்கு என்றும் பிரிக்க ஒன்றும் இல்லை அன்பிலே.

அவர்காலத்தின் சாட்சியாக இந்த எழுத்து நெஞ்சு நிமிர்ந்து நிற்கிறது. நிஜத்திலுமே இதன் ஒவ்வொரு அத்தியாயங்களும் பேசப்பட வேண்டியவை.

கிழக்கு மாகாண மண் இந்த எழுத்துக்கு கடன் பட்டிருக்கிறது.

அன்றைய காலத்தில் ஆசிரியர்களினது வீடுகளுக்கு வேலைக்காரர்களாய் ஆகிய சிறுவர்கள், விறகுக் கட்டைகள் சுமந்து வருவது பற்றி எழுதுவார்.. பள்ளிகளில் மலசலகூடங்கள் அவற்றின் கெட்ட நெடி... நபீலை நான் மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்க்கிறேன்.




என்ன அழகான ஒரு எழுத்து வசப்பட்டு இருக்கிறது அவருக்கு.. எல்லா வெகுமதிகளுக்கும் தகுமான எழுத்து.. மனித நடத்தைகளில் மீது இந்த சூழலின் நடவடிக்கைகளின் மீது சுவாரஸ்யமான உள் நோக்கங்களைச் செலுத்தி நகர்த்தும் லாவகம், ஒரு புகைப்பட ஆல்பத்தை விரித்துப்போடுவது போல எழுத்தின் யாவுமான நல்ல நல்ல அறிகுறிகளோடும்..

எழுதுவதற்கான தீவிர நாட்டமும்,உள்ளே ஆட்டுவிக்கும் சத்தியமான மன உணர்வும் அவரைத் தூண்டி இப்படி ஒரு நூலை எழுதி முடிக்க வைத்திருக்கிறது. அதுவரை அந்த எழுத்துதீராமல் அவரை அலைக்கழித்திரு க்க வேண்டும். வாரா வாரம் 'தினகரன்' வார மஞ்சரி ஒரு அழுத்தத்தைக் கொடுத்ததும் நலவு. எழுதி தீர்த்திருக்கிறார். இல்லையென்றால் காலம் கடந்து போய் இருக்கும் இது நம் கையில் கிடைக்க..ஒரு வகையில் 'தினகரனு'க்கும் நன்றி சொல்ல வேண்டும் ..

இன்றைய தலைமுறைகள் காணாத காலம் அது.கண்ணில் ஆடுகிறது. அவருடைய சிறு பால்யம் எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டது என்று எழுதுவார் திரு. உமா வரதராஜன்.

அதையே உணரவும் புரியவுமாய் மனசு வாய்த்திருப்பது நமக்குமேயான பெரிய ஆசீர்வாதம். சாதாரணத்துவத்தின் போர்த்தி மூடிய எல்லாப் பெண்மைத் தனங்களிலிருந்தும் வெளியே வந்து திரும்பத் திரும்ப பேசுவேன் 'தென்னம்படல் மறைப்பு' பற்றி.. என்றும் சொல்லிக் கொண்டு...

**கெக்கிறாவ ஸுலைஹா**

**(உதயபூங்கா நேர்காணல் தொடர்...)**

படசாலைக்கும் என்னலான உதவிகளை தொடர்ந்தும் செய்து வருகின்றேன்.

**3. மனநல ஆலோசகராக இருப்பது பற்றி கூறுங்கள்.**

இன்றைய காலத்தில் மாணவர்கள் கல்வி அழுத்தம், குடும்ப சூழ்நிலை, சமூக ஊடகப் பாதிப்பு, சமவயதுக்குழுக்களின் நெறிபிறழ்வுகள், அரசியல், பொருளாதார, கலாசார நெருக்கடிகள் போன்ற பல சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். பலர் வழிதெரியாது தடுமாறுகிறார்கள். இத்தகைய சூழ் நிலையில் மனநல ஆலோசகராக நான் என்னை தைரியப்படுத்திக் கொள்வதற்கும் என்னை சூழ உள்ளவர்களுக்கு நம்பிக்கையையும், உட்சாகத்தையும் கொடுப்பதற்கும் குறிப்பாக மாணவர்களது மன அழுத்தத்தை, மனப்பாரத்தை குறைக்கும் வழிகளை சொல்லிக் கொடுத்து சவால்களை எதிர்த்து நிற்கும் தன்னம்பிக்கையையும் துணிச்சலையும் ஏற்படுத்திக் கொடுத்து அனைவரிடத்திலும் நேர்மறை சிந்தனையை ஊக்குவிக்கிறேன். மாணவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் பிரச்சினைகளை ரகசியத் தன்மையுடன் கேட்டு, அவர்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்கி மீண்டெழுவதற்குரிய சக்தியை மகிழ்ச்சியடைகின்றேன். நீ ஏற்படுத்துவதையிட்டு பெரிதும் ஒருவரை வாழவைத்தால் முழு சமூகத்தையும் வாழவைத்தற்கு சமம் (அல்குர்ஆன்) மாணவ உளவள ஆலோசகராக இருப்பதை இத்தகைய உயர்வை அடைவதற்குரிய பெரும் வாய்ப்பாக மதிக்கின்றேன். ஒவ்வொரு பாடசாலைக்கும் குறைந்தது ஒரு உளவள ஆலோசகர் அவசியம் என்பதை ஆலோசனையாக முன்வைக்கின்றேன்.

**4. கல்வித்துறையில் உங்கள் பங்களிப்பு பற்றி கூறுங்கள்.**

கல்வி மேம்பாட்டு கருத்தரங்குகள், மாணவர் வழிகாட்டல் நிகழ்ச்சிகள், தொழில் வழிகாட்டல் (School Career Guidance) அமர்வுகள், தனிப்பட்ட, குழு ஆலோசனைகள் போன்ற பல திட்டங்களை முன்னெடுத்து வருகிறேன். மேலும் வகுப்பு வாரியாக வாழ்க்கைத் திறன் விருத்தி பயிற்சிகளையும் நடத்தி வருகின்றேன். குறிப்பாக O/L மற்றும் A/L மாணவர்களுக்கு எதிர்கால தொழில் இலக்கை நிர்ணயித்தல், பரீட்சைக்கான பாடத் திட்டம் தயாரித்தல், நேரமுகாமைத்துவம், பரீட்சை பயத்தை சமாளித்தல் போன்ற தலைப்புகளில் பயிற்சிகள் வழங்கி வருகிறேன். இவற்றோடு இணைந்து எமது செயற்திட்டங்களை பரவலாக்க மற்றும் துரிதப்படுத்த மாணவர் சார் கழகமொன்றையும் இவ்வருடம் ஆரம்பித்திருக்கின்றேன். மாணவர்களின் கல்வி மற்றும் ஒழுக்க வளர்ச்சிக்கு என்னால் முடியுமான முழு ஒத்துழைப்பையும் பாடசாலை நிருவாகத்திற்கு வழங்கி வருகின்றேன். பாடசாலை நிருவாகமும் எனக்கு முழுமையாக உதவிகளை செய்து வருகின்றது என்பதையும் ஞாபகம் கூறிக்ககொள்கின்றேன்.

**5. மாணவர்களுக்கு சொல்லக்கூடிய மனநல ஆலோசனைகள் என்ன?**

* உங்களை மற்றவர்களுடன் ஒப்பிட வேண்டாம் உங்கள் முன்னேற்றத்தை மட்டும் கவனியுங்கள். உங்களுக்குள் இருக்கின்ற விஷேட திறமையை இனங்கண்டு கொள்ளுங்கள்.
* தோல்வி என்பது முடிவு அல்ல அது ஒரு புதிய தொடக்கம் என்ற நம்பிக்கையோடு எல்லாவற்றிலும் உட்சாகமாக ஈடுபடுங்கள். உங்கள் முன்னேற்றத்திற்கு எப்போதும் உடல், உள்ளம், அறிவு மூன்றிற்கும் தினமும் நேரம் ஒதுக்குங்கள், கவனியுங்கள்.
* சமூக ஊடகங்களை அளவோடு பயன்படுத்துங்கள். பயனற்றவைளை விட்டு பாதுகாப்புப் பெறுங்கள். பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுடன் திறந்த மனதுடன் பேசுங்கள். அன்போடு நடந்து கொள்ளுங்கள்.
* நல்ல நண்பர்களையும் நல்ல புத்தகங்களையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.
* படைத்து, பரிபாலிக்கின்ற ஏக இறைவனுக்கு நன்றியுள்ள அடியனாக வாழுங்கள். இறுதியாக, கல்வி என்பது வெறும் மதிப்பெண்கள் அல்ல. நல்ல, சிறந்த மனிதர்களை உருவாக்குவதே கல்வியின் மிக உயர்ந்த எதிர்ப்பார்ப்பாகும்.

## அன்பான வாசகர்களே!

**அறிவுக்கரை பகுதிக்கு உங்களது இலக்கியக் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் என உங்களது ஆக்கங்களை எங்களுக்கு அனுப்பி வையுங்கள் தரம் கண்டு பிரசுரிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். உங்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்பி வைக்க கீழே உள்ள whatsapp இலக்கத்தை பயன்படுத்தவும்.**

0767877876



அரபாத் பஹர்தீன்

# இலங்கை கிரிக்கெட் வீரர்களின் திறமைக்கு ஏற்ப சம்பளம்

## புதிய முறை அறிமுகமாகலாம்

வீரர்களின் திறமைகளை அடிப்படையாகக் கொண்டு, எதிர்வரும் சர்வதேச தொடர்களுக் கான கொடுப்பனவு முறையை இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வீரர்களின் திறனை ஊக்குவிப்பதையும், வெற்றிகளைத் தூண்டுவதையும் நோக்கமாகக் கொண்டு, புதிய போனஸ் முறைகள் மற்றும் சம்பளக் குறைப்பு விதிகள் இதில் உள்வாங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதன்படி, இனிவரும் காலங்களில் தொடர் வெற்றிகளுக்கான போனஸ் தொகையானது, தரவரிசையில் முதல் 4 இடங்களிலுள்ள அணிகளுக்கு எதிராக வெற்றிபெறும் தொடர்களுக்கு மாத்திரமே வழங்கப்படவுள்ளது. இதற்கு முன்னர் தரவரிசையில் முதல் 9 இடங்களிலுள்ள அணிகளுக்கு எதிரான தொடர் வெற்றிகளுக்கு போனஸ் வழங்கப்பட்டது.

அதேபோல் டெஸ்ட், ஒருநாள் அல்லது இருபதுக்கு இருபது என எந்தவொரு போட்டி வடிவத்திலான தொடரில் தோல்வி யடைந்தால், அந்தத் தொடருக்கான போட்டி ஊதியத்திலிருந்து 10% தொகை குறைக்கப் படவுள்ளது.

அத்துடன், வெளிநாடுகளில் இடம்பெறும் தொடர்களின் போது பெறும் வெற்றிகளுக்கு முழுமையான போனஸ் வழங்கப்படும் அதேவேளை, உள்நாட்டில் பெறப்படும் வெற்றிகளுக்கான போனஸ் மட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இருபதுக்கு இருபது தொடர்களைப் பொறுத்தவரை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பெறப்படும் வெற்றிகளுக்கு சமமான போனஸ் வழங்கப்படும்.

சர்வதேச தரவரிசையில் முதலிடத்திலுள்ள டெஸ்ட் அணியைத் தோற்கடித்தால், கூட்டு போனஸ் தொகையாக 150,000 அமெரிக்க டொலர்கள் வழங்கப்படும்.

2ஆவது, 3ஆவது மற்றும் 4ஆவது இடங்களிலுள்ள அணிகளுக்கு எதிரான வெற்றிகளுக்கு முறையே 100,000, 75,000 மற்றும் 60,000 அமெரிக்க டொலர்கள் என குறைந்து செல்லும் வரிசையில் போனஸ் வழங்கப்படும்.

முதலிடத்திலுள்ள அணியைத் தோற்கடித்தால்:

**டெஸ்ட் போட்டிகள் :**
வெளிநாட்டில் - 150,000 அ.டொ உள்நாட்டில் - 100,000 அ.டொ

**ஒருநாள் போட்டிகள் :**
வெளிநாட்டில் - 150,000 அ.டொ உள் நாட்டில் - 75,000 அ.டொ

**இருபதுக்கு இருபது போட்டிகள்:**
உள்நாடு அல்லது வெளிநாடு என எவ்விடத்திலும் முதலிட அணியை வென்றால் 75,000 அ.டொ.

**ஒவ்வொரு போட்டிக்காகவும் வீரர்களுக்கு வழங்கப்படும் ஊதியம்:**

**டெஸ்ட் போட்டிகள் :**
வெற்றிக்கு - 15,000 அ.டொ சமநிலை (Draw) - 10,000 அ.டொ தோல்வி கைவிடப்பட்ட போட்டிக்கு - 7,500 அ.டொ.

**ஒருநாள் போட்டிகள் :** வெற்றிக்கு - 7,500 அ.டொ தோல்விக்கு - 3,500 அ.டொ கைவிடப்பட்ட போட்டிக்கு - 3,000 அ.டொ.

**இருபதுக்கு இருபது போட்டிகள்:**
வெற்றிக்கு - 5,000 அ.டொ தோல்விக்கு - 2,500 அ.டொ கைவிடப்பட்ட போட்டிக்கு - 2,000 அ.டொ.

**தலைவர்களுக்கான விசேட கொடுப்பனவு:**
தலைமைத்துவப் பொறுப்பைக் கௌரவிக்கும் வகையில் ஒவ்வொரு போட்டியிலும் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும்.
எனினும், போட்டி முழுவதும் களத்தில் இருந்தால் மாத்திரமே இது வழங்கப்படும்.

**டெஸ்ட் மற்றும் ஒருநாள்:**
ஒரு போட்டிக்கு மேலதிகமாக 1,000 அ.டொ.

**இருபதுக்கு இருபது போட்டிகள்:**
ஒரு போட்டிக்கு மேலதிகமாக 500 அ.டொ.

தனிப்பட்ட திறமைகளுக்கான ஊக்கத்தொகை (ICC தரவரிசைப்படி):
எந்தவொரு போட்டி வடிவிலும் உலகின் முதலிட வீரரானால் - 25,000 அ.டொ (ஒருமுறை மாத்திரம்).
உலகத் தரவரிசையில் 2 முதல் 5 இடங்களுக்குள் வந்தால் - 20,000 அ.டொ (ஒருமுறை மாத்திரம்).

இதுதவிர, வருடாந்த ஒப்பந்தத் தொகை, பயணக் கொடுப்பனவு, நாளாந்தப் படி மற்றும் அனுசரணையாளர் பங்களிப்பு ஊடாக மேலதிக கொடுப்பனவுகள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும், இது குறித்து இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் ஊடகப் பிரிவிடம் வினவிய போது, புதிய கொடுப்பனவு முறைமை குறித்து இதுவரை இறுதி முடிவு எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்தனர்.

# இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் பதவியை துறக்கிறார் ஷம்மி




இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் ஷம்மி சில்வா எதிர்வரும் புதன்கிழமை (29) தனது பதவியை இராஜினாமா செய்ய அதிக வாய்ப்புள்ளதாக நம்பகமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

2019 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத் தலைவராகப் பணியாற்றி வரும் ஷம்மி சில்வா, பொறுப்புவாய்ந்த தரப்பினரால் விடுக்கப்பட்ட அறிவித்தலுக்கு இணங்கவே இந்தப் பதவியை விட்டு விலகவுள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த காலங்களில் ஷம்மி சில்வா தலைமையிலான கிரிக்கெட் நிர்வாகம் குறித்து கிரிக்கெட் ரசிகர்கள் மற்றும் முன்னாள் வீரர்கள் மத்தியில் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

இலங்கை கிரிக்கெட்டின் வீழ்ச்சி மற்றும் நிர்வாகச் சிக்கல்கள் காரணமாக அவர் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றிருந்தது.

இந்தச் சூழலிலேயே அவர் பதவி விலகுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

அதன்பின்னர் ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்காகப் புதிய இடைக்காலக் குழுவொன்று நியமிக்கப்பட வாய்ப்புள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.



# மரதன் போட்டியில் புதிய உலக சாதனை படைத்தார் கென்ய வீரர் சாவே

லண்டனில் நடைபெற்ற மரதன் போட்டியில் கென்ய வீரர் செபஸ்டியன் சாவே ஒரு மணித்தியாலம் மற்றும் 59 நிமிடங்களில் போட்டித் தூரத்தை நிறைவு செய்து புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

இந்த போட்டியில் கென்யாவின் செபஸ்டியன் சாவே போட்டி தூரத்தை (42.2 கிலோ மீட்டர்) முதலில் கடந்தார். இதற்கு அவர் எடுத்துக் கொண்ட நேரம் 1 மணி நேரம் 59 நிமிடங்கள் 30 வினாடிகள் ஆகும். இது புதிய உலக சாதனையாகும். அதாவது மரதன் உலகில் 2 மணி நேரத்திற்கும் குறைவாக எந்த ஒரு வீரரும் போட்டி தூரத்தை கடந்தது இல்லை என்ற தடையை அவர் உடைத்தெறிந்து இப் புதிய உலக சாதனைக்கு சொந்தக்காரர் ஆகியுள்ளார்.

இந்த உலக சாதனை குறித்து செபஸ்டியன் சாவே தெரிவிக்கையில், “போட்டி தூ ரத்தின் இலக்கை அடைந்த பின்னர் நேரத்தை பார்த்த பின் நான் மிகவும் உற்சாகம் அடைந்தேன். இது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. என் வாழ்க்கையில் நான் மறக்க முடியாத நாள்” என்று கூறியுள்ளார்.

# கம்பஹா மாவட்ட சம்பியனாகியது கஹட்டோவிட்ட அல் பத்ரியா அணி



இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனம் நடாத்திய 2025 டிவிஷன் II 20 வயதுக்குற்பட்டோருக்கான உதைபந்தாட்டத் தொடரில் கஹட்டோ விட்ட அல் பத்ரியா மகா வித்தியாலய அணி கம்பஹா மாவட்ட சம்பியனாகி யுள்ளது.

இந்த வெற்றி மூலம் அகில இலங்கை மட்ட சுற்றுக்கும் அல் பத்ரியா மகா வித்தியாலய அணி தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கம்பஹா பண்டாரநாயக்க மத்திய கல்லூரி அணியுடனான போட்டியை வென்றதன் மூலம் இறுதிப் போட்டிக்கு அல்பத்ரியா மகா வித்தியாலய அணி தெரிவாகியது.

இத் தொடரின் இறுதிப் போட்டி கடந்த வெள்ளியன்று திஹாரிய அல் அஸ்ஹர் மத்திய கல்லூரி அரங்கில் நடைபெற்றது.

விறுவிறுப்பாக இடம்பெற்ற இறுதிப் போட்டியில் இரு அணியினரும் கடுமையான ஆட்டத்தை வெளிக்காட்டிய நிலையில் 1:0 என்ற அடிப்படையில் கஹட்டோவிட்ட அல் பத்ரியா பாடசாலை அணி வெற்றியீட்டி கம்பஹா மாவட்ட சம்பியனாகியது.

இதேவேளை இந்த வெற்றி மூலம் அல் பத்ரியா அணி அடுத்த மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள டிவிஷன் 1 போட்டிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றுள்ளது. அல் பத்ரியா அணி தொடர்ந்தும் மூன்றாவது முறையாக அகில இலங்கை மட்டப் போட்டிகளுக்குத் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நியூஸிலாந்திடம் போராடித் தோற்றது இலங்கை டஸ்கர்ஸ்



கொழும்பு ரேஸ்கோர்ஸ் சர்வதேச ரக்பி மைதானத்தில் சனிக்கிழமை (25) மாலை நடைபெற்ற நியூசிலாந்து 85 கிலோவிற்கும் குறைந்த எடையுடைய அணிக்கு எதிரான இரண்டு போட்டிகள் கொண்ட தொடரின் முதலாவது போட்டியில், இலங்கை டஸ்கர்ஸ் அணி 27:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் தோல்வியடைந்தது.

பலமிக்க நியூசிலாந்து அணிக்கு எதிராக அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய இலங்கை அணி இரண்டு ட்ரைகளைப் பெற்றுக்கொண்டது. இலங்கை அணி சார்பாக ஆகாஷ் மதுஷங்க மற்றும் ஜனிந்து டில்ஷான் ஆகியோர் தலா ஒரு ட்ரை வீதம் பெற்றனர். அதேவேளை தேனுக நாணயக்கார இரண்டு பெனால்டி வாய்ப்புகளைப் புள்ளிகளாக மாற்றினார்.

இலங்கை அணியின் திடீர் தாக்குதல் மற்றும் பலமான தடுப்பாட்டத்தை எதிர்கொள்ள நியூசிலாந்து அணி ஆரம்பத்தில் தடுமாறிய போதிலும், இறுதியில் அந்த அணி மூன்று ட்ரைகளை பதிவு செய்தது. இடைவேளையின் போது நியூசிலாந்து அணி 16:13 என்ற புள்ளிகள் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இதேவேளை, இரு அணிகளுக்கும் இடையிலான தொடரின் இரண்டாவது போட்டி எதிர்வரும் மே மாதம் 3 ஆம் திகதி கண்டி நித்தவெல ரக்பி மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.